இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 78 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 10 – வெள்ளிக்கிழமை 27 அக்டோபர் 2023 – திருச்சி ★★ 16+12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 78: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 10 - Friday 27 October 2023 - Trichy ★★ 16+12 Pages ₹ 5.00

## 16 லட்சம் பேர் பயன்பெறுவர்! 42 சதவிகிதத்திலிருந்து 46 சதவிகிதமாக

# அரசு அலுவலர் - ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக். 27-**

**அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தற்போது வழங்கப்படும் 42 சதவீத அகவிலைப்படி, 01.07.2023 முதல் 46 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

மக்கள் நலனுக்காக அரசு வகுக்கும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் அரும்பணியில், அரசோடு இணைந்து பணியாற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனை இந்த அரசு தொடர்ந்து பாதுகாத்து வருகின்றது. முந்தைய அரசு விட்டுச் சென்ற கடும் நிதி நெருக்கடி மற்றும் கடன் சுமைக்கு இடையேயும், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகள் குறித்த வாக்குறுதிகளைப் படிப்படியாக நிறைவேற்ற முனைப்புடன் இந்த அரசு செயல்பட்டு வருகின்றது.

அவ்வகையில், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் கோரிக்கையை முதலமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலித்து, ஒன்றிய அரசு பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வை அறிவிக்கும் போதெல்லாம் உடனுக்குடன் தமிழ்நாடு அரசும் அதை பின்பற்றி அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர்களுக்கும் அகவிலைப்படி உயர்வை செயல்படுத்தப்படும் என்று ஏற்கனவே வெளியிட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, தற்போது 42 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 01.07.2023 முதல் 46 சதவீதமாக உயர்த்தி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த அகவிலைப்படி உயர்வால், சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு 2546.16 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். எனினும், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் நலன் கருதி இதற்கான கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.10.2023) தலைமைச் செயலகத்தில், நீர்வளத் துறையின் திட்ட உருவாக்கப் பிரிவின் உதவி செயற் பொறியாளர்களின் பயன்பாட்டிற்காக 3 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் 41 ஈப்புகளை வழங்கிடும் வகையில், அவ்வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ரூ.3.70 கோடி மதிப்பில்

# நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர்களுக்கு புதிய வாகனங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, அக். 27-**

**நீர்வளத்துறை சார்பில் உதவி செயற் பொறியாளர்களின் பயன்பாட்டிற்காக ரூ.3.70 கோடி மதிப்பில் 41 ஈப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.10.2023) தலைமைச் செயலகத்தில், நீர்வளத் துறையின் திட்ட உருவாக்கப் பிரிவின் உதவி செயற் பொறியாளர்களின் பயன்பாட்டிற்காக 3 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் 41 ஈப்புகளை வழங்கிடும் வகையில், அவ்வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

நீர் ஆதாரங்களை சிறந்த முறையில் மேம்படுத்தி விவசாயம், குடிநீர் மற்றும் தொழிற்சாலைகள் போன்ற பல்வேறு துறைகளின் நீர் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு புதிய கட்டமைப்புகளை உருவாக்குதல், ஏற்கெனவே உள்ள நீர்நிலைகள் மற்றும் அதன் உட்கட்டமைப்புகளை நல்ல முறையில் பராமரித்தல், பாசன கட்டமைப்புகளான அணைகள், அணைக்கட்டுகள், நிலத்தடி தடுப்புசுவர்கள், கால்வாய்கள், வாய்க்கால்கள், ஏரிகள் போன்றவற்றை உருவாக்குதல், புனரமைத்தல் மற்றும் பராமரித்தல் போன்ற பல்வேறு முக்கியப் பணிகளை நீர்வளத்துறை மேற்கொண்டு வருகிறது.

நீர்வளத்துறையின் திட்ட உருவாக்கப் பிரிவின் கீழ் உள்ள அனைத்து உபகோட்டங்களில் பணிபுரியும் அனைத்து உதவி செயற்பொறியாளர்களுக்கும் பழைய வாகனங்களுக்கு மாற்றாக புதியதாக ஈப்பு வாகனங்களை வழங்கிடும் விதமாக, 3 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்ட 41 ஈப்புகளை நீர்வளத் துறையின் திட்ட உருவாக்கப் பிரிவின் உதவி செயற் பொறியாளர்களின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் வகையில் அவ்வாகனங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்து, வாகனங்களுக்கான சாவிகளை உதவி செயற்பொறியாளர்களுக்கு வழங்கினார்.

இதனால் திட்ட உருவாக்க பிரிவில் பணிபுரியும் பொறியாளர்கள், நிலமேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் ஆதாரங்களைப் பெருக்க தொலைதூர மற்றும் மலைப்பாங்கான இடங்களில் பல புதிய திட்டங்களை ஆய்வு செய்து உருவாக்க இந்த ஈப்புகள் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும்.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா, நீர்வளத் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் (பொறுப்பு) கு. அசோகன், நீர்வளத்துறை திட்ட உருவாக்கப் பிரிவின் தலைமைப் பொறியாளர் க.பொன்ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நாடாளுமன்றத் தேர்தல் குறித்து

# கட்சிப் பிரதிநிதிகளுடன் தேர்தல் அதிகாரிகள் ஆலோசனை!

சென்னை, அக். 27-

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் இன்று (அக்டோபர் 27ம் தேதி) வெளியிடப்படவுள்ளது. இந்நிலையில், அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு ஆலோசனை மேற்கொண்டார். சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்ற ஆலோசனையில், வாக்காளர் பட்டியலில் பெயர் திருத்தம், நீக்கம், இரட்டை பதிவு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக, அரசியல் கட்சி பிரதிநிதிகள் கருத்து தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து இறுதி வாக்காளர் பட்டியல் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த ஆலோசனைக்கூட்டத்தில், தி.மு.க. சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி ஆகியோர் பங்கேற்று பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தனர். இதே போல், காங்கிரஸ், அ.தி.மு.க., மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் பங்கேற்று தங்களது கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

**ஆர்.எஸ்.பாரதி பேட்டி!**

வாக்காளர் பட்டியலில் உள்ள குளறுபடிகளை சரி செய்ய வேண்டும் என்றும், தேர்தல் பணியில் ஈடுபடும் பெண் பணியாளர்களுக்கு உரிய அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்றும் தி.மு.க. சார்பில் வலியுறுத்தப்பட்டதாக ஆர்.எஸ். பாரதி தெரிவித்தார்.

## சுதந்திரப் போராட்ட வீரர்களை உண்மையிலேயே மதிப்பவராக இருந்தால்

# முதுபெரும் தலைவர் சங்கரய்யாவுக்கு கவுரவ டாக்டர் பட்டம் வழங்க ஆளுநர் ஒப்புதல் தராதது ஏன்?

## அமைச்சர் க.பொன்முடி கேள்வி!

*சென்னை, அக். 27 -*

தமிழ்நாட்டைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர்களின் மீது உண்மையிலேயே ஆளுநருக்கு அக்கறை இருந்தால், கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் சங்கரய்யாவுக்கு டாக்டர் பட்டம் வழங்க ஒப்புதல் அளிக்க வேண்டும் என உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில், சில தினங்களுக்கு முன்பு மருது சகோதரர்கள் நிகழ்ச்சியில் பேசிய ஆளுநர் ஆர்.என்.ரவி, சுதந்திர போராட்ட வீரர்களை தமிழக அரசு மறந்து விட்டதாகக் குற்றம்சாட்டி பேசினார்.

இந்த நிலையில், சென்னை தலைமைச் செயலகத்தில் உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்தார்.



அப்போது அவர், "தமிழகத்தின் சுதந்திரப் போராட்ட வீரர்களை தி.மு.க. நினைவு கூர தவறியதாக, தமிழகத்தின் சுதந்திர போராட்ட வரலாறு அனைத்தும் தெரிந்தவர்போல, ஆளுநர் ஆர்.என். ரவி கருத்து கூறியிருக்கிறார். அதற்கான பதிலை, தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு நேற்றே தெரிவித்துள்ளார்.

தமிழக சுதந்திரப் போராட்ட வீரர்கள் மேல் அக்கறை உள்ளவர் போல பேசுகிற தமிழக ஆளுநர், ஊடகங்கள் வழியாக நான் அளிக்கும் பேட்டியை நிச்சயமாக கேட்பார் என்று கருதுகிறேன். ஆளுநருக்கு உண்மையிலேயே தமிழகத்தைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர்களின் மீது அக்கறை இருக்குமானால் மதுரை பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழு மற்றும் ஆட்சிமன்ற பேரவைக்குழு இரண்டும் சேர்ந்து, ஆட்சிக்குழுவின் மூலமாக 18.8.2023 அன்றும், ஆட்சிமன்ற பேரவைக்குழுவில் 20.9.2023 லும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு ஒரு பரிந்துரை அனுப்பி வைக்கப்பட்டது.

அது அந்த பல்கலைக்கழகத்தின் சட்ட விதியின்படி, ஆட்சிமன்ற பேரவைக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், கவுரவ டாக்டர் பட்டம் வழங்க வேண்டும். ஆனால், அதற்கு வேந்தரின் கையெழுத்தும் தேவை என சட்ட விதிகளில் குறிப்பிடப் பட்டுள்ளது.

சங்கரய்யா மிகச்சிறந்த சுதந்திர போராட்ட வீரர். கல்லூரி படிப்பையே இழந்து 9 ஆண்டுகள் சிறையில் வாடி இருக்கிறார். அதோடு இரண்டு ஆண்டுகள் தலைமறைவாக இருந்து போராடியவர். அவருடைய வரலாற்றை பார்த்து தெரிந்து கொண்டாவது ஆளுநர், இதில் கையெழுத்திட வேண்டும்" எனத் தெரிவித்திருக்கிறார்.



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 27-10-2023

# மருது சகோதரர்களைப் பேச மன்னிப்பு சகோதரர்க்கு அருகதை உண்டா?

**பல ஆண்டு காலம் அதிகாரப் பதவியை அனுபவித்துவிட்டு - இப்போது சொகுசான வாழ்க்கையை அடைந்திருக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு இப்போதுதான் மருதுபாண்டியர் கண்ணுக்குத் தெரியவந்துள்ளார்.**

**'என்னது சிவாஜி செத்துட்டாரா?' என்று கேட்பதைப் போல, 'மருதுபாண்டியரை மறைத்துவிட்டார்கள்' என்று கிளம்பி இருக்கிறார். பூனை கண்ணை மூடிக் கொண்டதால் உலகம் இருண்டு விடாது. இது மருதுபாண்டியர் பூமி என்பதை நினைவூட்டிக் கொண்டே இருக்கும் திராவிட பூமி இது.**

இவர்களுக்கு இப்போது மருதுபாண்டியரைப் பற்றிப் பேச வேண்டிய அவசியம் என்ன வந்தது? அவரைப் பேசுவதால் ஏதாவது ஓட்டு சிந்தாதா என்ற நப்பாசை தான். பா.ஜ.க.வுக்கு இருந்த ஒன்றரையணா ஓட்டையும் வந்து குறைத்ததில் அரைப்பங்கு அண்ணாமலைக்கு உண்டு. அரைப் பங்கு ஆர்.என்.ரவிக்கு உண்டு. மற்றபடி இவர்களால் பா.ஜ.க. ஒரு சென்டி மீட்டர் கூட உயரவில்லை.

ஏதோ ஒரு தனியார் பயிற்சி நிறுவனத்துக்குப் போய் தனது அரைகுறை அறிவைக் காட்டிக் கொண்டு இருக்கிறார் ஆளுநர். அந்த வரிசையில் திருச்சியில் நடந்த நிகழ்ச்சியில், "இரண்டாண்டுகளுக்கு முன் நான் தமிழ்நாட்டிற்கு வந்தபோது தமிழ்நாடு அரசிடம் நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களின் பெயர் பட்டியலை கேட்டிருந்தேன். அவர்கள் 40க்கும் குறைவானப் பெயர்களை மட்டும்தான் எனக்குத் தந்தார்கள். பின்னர் தேடி படித்ததில் பல்லாயிரக்கணக்கான வீரர்கள் தமிழ்நாட்டில் பிறந்து நாட்டின் விடுதலைக்காகப் போராடி இருப்பது தெரியவந்தது. தமிழ்நாட்டில் பிறந்த சுதந்திரப் போராட்ட வீரர்கள் மறக்கடிக்கப்பட வேண்டும் என்றே இங்கு ஆட்சி செய்தவர்கள் திட்டமிட்டு அதை செய்தார்கள். அவர்கள் தமிழ்நாட்டில் கொண்டாடப்படவில்லை, பாடப் புத்தகங்களில் அவர்கள் வரலாறு அழிக்கப்பட்டது. சுதந்திரப் போராட்டத் தியாகிகள் எந்த சமூகத்தில் இருந்து வந்தார்கள் என்பதிலிருந்து அவர்களை ஜாதி தலைவர்களாக அடையாளப்படுத்தி, மக்களை ஒன்றுபட விடாமல் தடுக்கிறார்கள். சுதந்திரப் போராட்ட வீரர்களை கொண்டாடுவதில்லை. நாம் கடந்த கால வரலாறுகளை நினைவு கூர்வது அவசியம். தமிழ்நாட்டில் சுதந்திரப் போராட்ட வீரர்கள் குறித்து ஆராய்ச்சி மாணவர்கள் யாரும் ஆய்வு செய்வதில்லை. அது எனக்கு வருத்தமாக உள்ளது. வருங்கால தலைமுறையினர் சுதந்திரப் போராட்ட வீரர்கள் குறித்து முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டும்" என்று பேசி இருக்கிறார் ஆர்.என்.ரவி.

அவரது பேச்சைப் படிக்கும்போது புல்லரிக்கிறது. சுதந்திரத்துக்காகவே பிறப்பெடுத்த தலைமுறையைப் போல பேசி இருக்கிறார் அவர்.

**கோட்சேக்களை குருமார்களாகக் கொண்ட கூட்டம், இந்திய விடுதலை வீரர்களைப் போற்றுவதைப் பார்த்தால் சிரிப்பாக இருக்கிறது. 'மன்னிப்பு'க் கடித சாவர்க்கரை துதிபாடும் கூட்டம் இந்திய விடுதலைப் போராட்டம் பற்றி பேசுவதைக் கேட்டால் புல்லரிக்கிறது. இந்தியாவின் புகழ்பெற்ற வழக்கறிஞரான ஏ.ஜி.நூரணி அவர்கள், 'சாவர்க்கரும் இந்துத்துவமும் - மகாத்மா காந்தி படுகொலையும்' என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதினார். ஆவணக் காப்பகத்தின் பல்வேறு தகவல்களைத் திரட்டி எழுதப்பட்ட வரலாற்று ஆய்வு நூலாகும் அது. பல முறை ஆங்கில அரசிடம் மன்னிப்புக் கேட்டவர் சாவர்க்கர் என்பதை ஆதாரங்களுடன் அந்த நூலில் ஏ.ஜி.நூரணி சொல்லி இருக்கிறார்.**

1883 முதல் 1966 வரை வாழ்ந்தவர் சாவர்க்கர். இந்தியாவிலும் இலண்டனிலும் மன்னராட்சிக்கு எதிராகப் பேசியதாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு 1910 ஜூலை 22 அன்று மும்பைக்கு அழைத்து வரப்பட்டார் சாவர்க்கர். டிசம்பர் 10 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின் படி ஆயுள் காலம் முழுவதும் நாடுகடத்தப்பட்டு சிறை வைக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பு தரப்படுகிறது. அதன்படி அந்தமான் சிறையில் அடைக்கப் படுகிறார். 1911 ஆங்கில அரசுக்கு அவர் ஒரு கருணை மனு அனுப்புகிறார். அதன்மீது நடவடிக்கை இல்லை என்றதும் 1913 நவம்பர் 14 அன்று மீண்டும் கருணை மனு போடுகிறார். அந்த வாசகங்களை வழக்கறிஞர் ஏ.ஜி.நூரணி தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**"அரசு தன் நல்லதிகாரத்தைப் பயன்படுத்தி என்னை விடுவித்தால் அரசியலமைப்பின் செயல்பாட்டிற்காக வாதாடுவதுடன் ஆங்கில அரசுக்கு விசுவாசமாகவும் நடந்து கொள்வேன். அரசு எந்த வகையில் விரும்புகிறதோ அந்த வகையில் சேவகம் புரியத் தயாராக உள்ளேன். எனது மாற்றம் மனசாட்சியின் குரலுக்கேற்ப ஏற்பட்டுள்ளதால் எனது எதிர்கால நடத்தை அதற்கேற்பத்தான் இருக்கும். என்னைச் சிறையில் வைத்திருப்பதன் மூலம் எதுவும் பெற இயலாது. மாறாக அவ்வாறு இல்லாதிருப்பதை ஒப்பிட்டுப் பார்க்கலாம். தந்தை போன்ற அரசின் வாசலுக்குக் கெட்டழிந்த மகன் திரும்ப வருமாறு கருணை செய்ய வல்லமை மிக்க தங்களால்மட்டுமே முடியும்"- என்று சாவர்க்கர் எழுதி இருக்கிறார். மன்னிப்பு, கருணை மனுவை விட மிக மோசமான வார்த்தைகள் இவை என்கிறார் வழக்கறிஞர் ஏ.ஜி.நூரணி.**

1924 எரவாடா சிறையில் இருந்து நிபந்தனைகள் அடிப்படையில் விடுதலை செய்யப்படுகிறார் சாவர்க்கர். அடுத்த ஆண்டு ஒரு கட்டுரை எழுதியதற்காக மீண்டும் அவர் மீது வழக்குப் பாய்கிறது. அதற்கு அனுப்பிய பதிலில் சுயராஜ்யம் என்ற சொல்லில் தனக்கு நம்பிக்கை இல்லை என்று பதில் அனுப்பி இருக்கிறார் சாவர்க்கர். அவருக்கு மீண்டும் பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்படுகிறது. 1937 ஆம் ஆண்டு தான் முழுமையாக விடுவிக்கப்படுகிறார். இவை அனைத்தையும் வரிசைப்படுத்தி இருக்கிறார் ஏ.ஜி.நூரணி.

**"சாவர்க்கரின் கஷ்டங்களைக் குறைத்து மதிப்பிடக் கூடாது. அதேபோல், அவரது சரணாகதியையும் சமரசப் போக்கையும் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது. அவரை வீரராகப் புகழ்பவர்கள், அவரது முதல் பகுதியை மட்டும் மிகைப்படுத்திக் கூறிவிட்டு பிற்பகுதியைப் பற்றி அவர்களால் மறுக்க முடியாவிட்டாலும் கண்டுகொள்வதில்லை" என்று எழுதி இருக்கிறார் நூரணி.**

இத்தகைய மன்னிப்பு சகோதரர்க்கு மருது சகோதரர்களைப் பற்றிப் பேச அருகதை உண்டா?

(குறிப்பு: தி.மு.க.வும் விடுதலைப் போராட்ட வீரர்களும் - என்ற தலைப்பிலான தலையங்கம் நாளை!)



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.10.2023) சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் அவர்களின் பேரன் டாக்டர் நிகாஷ், ஜனனி ஜோயல் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளர் முகுல் வாஸ்னிக், தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ்.அழகிரி உள்ளிட்ட கட்சி தலைவர்கள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### இந்தியாவில் எந்தக் கட்சியும் செய்யாத அளவுக்கு

# கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி வருவது தி.மு.க.!

## தேனியில் கழக இளைஞரணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**தேனி, அக்.26-**

**இந்தியாவில் எந்தக் கட்சியும் செய்யாத அளவுக்கு தி.மு.க.வின் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கப்பட்டு வருவதாக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

தேனி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக தி.மு.க. இளைஞரணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தேனி சென்றுள்ளார். அதன் ஒரு பகுதியாக கம்பம் தனியார் அரங்கில் தி.மு.க. மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கினார்.

அப்போது ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி மற்றும் தேனி மாவட்ட நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தி.மு.க. மூத்த முன்னோடிகளிடம் வாழ்த்துப் பெறவே தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளதாகவும், இதுவரை எந்தக் கட்சியும் செய்யாத அளவிற்கு தி.மு.க. இளைஞரணி சார்பில் 40 கோடி ரூபாய் அளவில் பொற்கிழி வழங்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.



**கர்னல் ஜான் பென்னி குவிக்கிற்கு மரியாதை!**

இதனிடையே, முல்லைப்பெரியாறு அணையைக் கட்டி தேனி, மதுரை உள்ளிட்ட ஐந்து மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்த கர்னல் ஜான் பென்னி குவிக்கிற்கு தேனி லோயர்கேம்பில் அமைக்கப்பட்டுள்ள நினைவு மண்டபத்தில், அவருடைய திருவுருவச்சிலைக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அப்போது ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் இ.பெரியசாமி, மாவட்ட ஆட்சியர் சஜீவனா, சட்டமன்ற உறுப்பினர்கள் கம்பம் ராமகிருஷ்ணன், மகாராஜன், சரவணக்குமார், தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

முன்னதாக, கம்பம் அருகேயுள்ள ஆதிசஞ்சனசேரி தனியார் பெண்கள் கல்லூரி மாணவிகள் சாலையில் இருபுறம் நின்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது, புதுமைப் பெண் திட்டத்திற்கும், இலவச பேருந்துப் பயண திட்டத்திற்கும் நன்றி தெரிவிக்கும் விதமான வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி, அமைச்சருக்கு நன்றி தெரிவித்தனர்.

### கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் - கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்பு!

# திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் கலைஞர் நூற்றாண்டு கருத்துரைக் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

*திருச்சி, அக். 27-*

*திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கொடியேற்று விழா மற்றும் அணிகளுக்கு கருத்துரை கூட்டம் நாளை (28.10.2023 - சனிக்கிழமை) காலை 08.00 மணிக்கு குடமுருட்டி பாலம் அருகில் 100 அடி கொடி கம்பத்தில் கழக இரு வண்ணக் கொடியேற்றி கல்வெட்டை கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைக்க உள்ளார்.*

*அதனைத்தொடர்ந்து திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் கலந்து கொண்டு அணிகளுக்கு கருத்துரையாற்றுகிறார்கள்.*

*இந்நிகழ்வில் கழக முதன்மைச் செயலாளரும் அமைச்சருமான கே.என்.நேரு பங்கேற்று சிறப்பிக்கிறார்.*

*இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர, நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் தொண்டர்கள் அனைவரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.*

# உள்ளாட்சியில் பெண்களுக்கு 50% ஒதுக்கீடு தந்த ஆட்சி தி.மு.க.!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. பேச்சு!

*நாமக்கல், அக். 27-*

*நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி, மாணவர் அணி, பொறியாளர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி ஆகியவை இணைந்து நடத்திய ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் நளா ஹோட்டலில் நடைபெற்றது.*

*இக்கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது.*

*கூட்டத்தில் நாமக்கல் திமுக தெற்கு நகரச் செயலாளர் ராணா ஆனந்த், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் பொன்.சித்தார்த், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ப.கிருபாகரன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சத்தியசீலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி.*

*பெண்களுக்கான சொத்தில் சம உரிமை வழங்குகின்ற சட்டம் முன் மொழிவின் போது பிரதமராக நேரு இருந்தார். பாராளுமன்றத்தில் அந்த சட்டம் முன்மொழிவு தோற்கடிக்கப்படுகிறது. அப்போது பெண்களுக்கு சொத்தில் சம உரிமை வழங்குகின்ற சட்டம் தோற்றுப் போய் இருக்கலாம். ஆனால் இந்த சட்டத்தை ஒரு நேரத்தில் ஒரு காலத்தில் இந்தியாவிலே நிறைவேற்றுவதற்கு ஒருவன் பிறப்பான். அவன் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவான் என்று டாக்டர் அம்பேத்கர் சொன்னார். அதை நிறைவேற்றிய ஒரே தலைவர் கலைஞர் அவர்கள். சம உரிமை வேண்டும் என்பதிலே இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த அளவிற்கு பணியாற்றி வருகிறது என்பதை நீங்கள் உணர வேண்டும். அதனால் இந்த தகவல் தொழில்நுட்ப பணியிலே இன்றைக்கு இணைந்து உங்களுக்கென்று சில பொறுப்புக்கள் வழங்கப்பட்டு அதிலே பணியாற்றி இருக்கிறீர்கள். நீங்கள் கழகத்தின் குடும்பத்திலிருந்து வந்தவர்களாக கூட இருக்கலாம். கழகத்திலே தொடர்புடையவர்களாக இருக்கலாம். புதியவர்களும் இருக்கலாம். அவர்களையும் நீங்கள் இன்றைய தினம் தகவல் தொழில்நுட்ப அணியில் இணைத்துள்ளீர்கள். இன்றைய தினம் கூட்டம் மாவட்ட அளவிலே இன்றைக்கு நிர்வாக பொறுப்பில் இருக்கக்கூடிய இளைஞர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, மாணவர் அணி, பொறியாளர் அணி என நான்கு அணியும் ஒருங்கிணைந்து இந்த கூட்டம் இன்றைய தினம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.*



*தமிழகத்தில் நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என கூறி தி.மு.க. சார்பில் 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து பெறும் கையெழுத்து இயக்கம் போன்ற பல்வேறு போராட்டங்கள் நடைபெற்று வருகிறது. அதற்காக நமது நாமக்கல் மாவட்டம் முழுவதும் 2 லட்சம் கையெழுத்து வாங்க வேண்டும். அதற்காக மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் என அனைவரும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களுடன் வார்டு தி.மு.க. நிர்வாகிகளுடனும் இணைந்து செயல்பட வேண்டும் என்றார்.*

*இக்கூட்டத்தில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எம்பரர் வ.இளம்பரிதி, எம்.கார்த்திக், கலைவாணன், பிரபாகரன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர்கள் சரவணன், பூபதி, சர்தார்ஜான், சுதா ஜெயக்குமார், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் மணிகண்டன் கடல் அரசன் கார்த்தி, சக்திவேல், பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் நேரு, உதயகுமார், திரு ஞானமூர்த்தி, இனியன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*



திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி ஏற்பாட்டில் பல்லடம் சாலை, ராமசாமி முத்தம்மாள் திருமண மண்டபத்தில் அடிமை அ.தி.மு.க. அரசின் உதவியுடன் நீட் தேர்வைத்திணித்து மருத்துவர் ஆக வேண்டும் என்ற நம் மாணவர்களின் கனவைச் சிதைக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்தும், நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி மாபெரும் கையெழுத்து இயக்கத்தை மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் மாநகர கழக செயலாளர்கள் டி.கே.டி.மு.நாகராசன், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாவட்ட அமைப்பாளர்கள் இளைஞர் அணி ஈ.தங்கராஜ், மாணவர் அணி து.கோபிநாத், மருத்துவர் அணி டாக்டர் கோபு ஆகியோர் முன்னிலையில் கழக அயலக அணி செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. துவக்கி வைத்தார். இதில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்டக் கழக, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

‘சாதனை நாயகர்’ முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சி பற்றி

# எடப்பாடி பழனிசாமி பொய்மூட்டைகளை அவிழ்த்து விடுவதா?

## கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் கண்டனம்!

சென்னை, அக். 27-

“‘சாதனை நாயகர்’ முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சி பற்றி பொய் மூட்டைகளை அவிழ்த்து விடுவதா?” என கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் எடப்பாடி பழனிசாமிக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு-

ஏறத்தாழ மூன்றாண்டு காலம் முதலமைச்சர் பதவியில் இருந்து மக்களைப் பற்றி கவலைபடாமல், தன்னையும், தனது அடிபொடிகளையும் வளமாக்கிக் கொண்ட எடுபிடி எடப்பாடி பழனிச்சாமி ஒரு மூட்டை பொய்களை தனது அறிக்கை மூலம் அவிழ்த்துக் கொட்டியிருக்கிறார்.

ஒன்றிய பா.ஜ.க. அரசு ஜி.எஸ்.டி வரி விதிப்பு, சி.ஏ.ஏ. சட்டம் என்று மாநில அரசுகளின் அதிகாரத்தைப் பறித்தும் சிறுபான்மை இன மக்களை அங்கீகரிக்க மறுத்தும்



சட்டங்களை நிறைவேற்றிய போது, பா.ஜ.க. அரசை ஆதரித்து, சாமரம் வீசிக் கொண்டிருந்த எடுபிடி பழனிச்சாமி, கழகத் தலைவர் தளபதி அவர்களைக் குறை கூறி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

**எடப்பாடியின் அறிக்கை நகைச்சுவையாக உள்ளது!**

தி.மு.க. ஆட்சிக் காலங்களில், தமிழ்நாடு வளர்ச்சிக்காகவும், தமிழ்நாடு மக்களின் முன்னேற்றத்திற்காகவும் நிறைவேற்றியுள்ள திட்டங்களை எல்லாம் மறைத்துவிட்டு, தான் செய்ததாக கூறிவரும் எடப்பாடியை மக்கள் ஏற்கனவே ஆட்சிக் கட்டிலிலிருந்து தூக்கி எறிந்துவிட்டார்கள் என்பதைப் புரிந்து கொள்ளாமல், தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களை குறை கூறினால், மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்ற குருட்டு நம்பிக்கையில் பொய் மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டியிருக்கிறார்.

பத்து ஆண்டுகளில் தமிழக அரசின் நிதி மேலாண்மையைச் சரியாக கையாளாமல் 5.7 லட்சம் கோடி ரூபாய் கடனில் நிறுத்திச் சென்ற எடப்பாடி அரசின் குறைகளை, சரி செய்வதையே தற்போதைய சவாலாக தலைவர் மு.க. ஸ்டாலின் அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நிலையில், எடப்பாடி பழனிச்சாமி இப்படியொரு அறிக்கை வெளியிட்டிருப்பது நகைச்சுவையாக உள்ளது.

தி.மு.கழகத்தின் 2021 தேர்தல் அறிக்கையில் உறுதி அளித்த பல்வேறு திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றி வரும் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆட்சியை குறை கூறியுள்ள எடப்பாடி அவர்கள், கோயம்பேட்டில் உள்ள பேருந்து நிலையத்தை சென்று பார்த்தால் புரியும், தி.மு.க. ஆட்சிக்காலத்தில் 2011ஆம் ஆண்டுக்கு முன் கட்டப்பட்ட பேருந்து நிலையத்தை திறந்து வைத்து, தன்னுடைய பெயரை பொறித்துக் கொண்டது யார் என்பது தெரியும்.

எடப்பாடி இன்றைய தினம் செய்தியாளர்களை சந்தித்தபோது, தன்னைப் பற்றித் தெளிவாக, அவரே தெரிவித்து விட்டார். தமிழகத்தில் விடுதலைப் போரில் ஈடுபட்டவர்களைப் பற்றி யாரும் கவலைப்படாமல், சாதி அரசியல் நடத்துகிறார்கள் என்று ஆளுநர் ஆர். என்.ரவி பேசியது குறித்து செய்தியாளர்கள் கேட்ட போது “நான் புராணங்களைப் படித்ததில்லை. அறிஞர்களிடம் கேட்க வேண்டிய கேள்விகளை என்னிடம் கேட்காதீர்கள்” என்று, தான் அறிஞர் இல்லை என்று தன்னைப் பற்றி தானே தெளிவாக விளக்கியிருப்பதோடு, ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்து நடத்தப்பட்ட விடுதலைப் போரை, மகாபாரதப் போர் என்று நினைத்துக் கொண்டு பேசியிருக்கிறார். அத்துடன், ஆங்கிலயே ஆட்சிக்கு எதிராக நடந்த போர், புராணக் கதைகளில் உள்ளது என்றும் தெரிவித்திருக்கிறார் எடப்பாடி பழனிச்சாமி.

அவருடைய பேட்டியையும் அவருடைய அறிக்கையையும் படித்துப் பார்த்தால், அவர் யார் என்பதையும், அவர் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மீது அவிழ்த்துக் கொட்டிய பொய் மூட்டையை பற்றியும் தெரிந்து கொள்வார்கள்.

இவ்வாறு டி.கே.எஸ். இளங்கோவன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

# ‘மோடியோடு மேடையில் ஏற மாட்டேன்!’ மிரண்டோடும் மிசோராம் முதல் அமைச்சர்!

தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) யின் ஒரு அங்கமாக இருக்கும் மிசோ தேசிய முன்னணியின் தலைவரும், தற்போதைய முதல் அமைச்சருமான சோரம் தங்கா, வரும் நவம்பர் 7 அன்று நடைபெற இருக்கும் சட்டமன்றத் தேர்தலில் தங்கள் கட்சி பி.ஜே.பி.யோடு இணைந்து செயல்படாது என அறிவித்துள்ளார்.

**பக்கத்து மாநிலமான மணிப்பூரில் பா.ஜ.க. ஆளுகின்றது. அங்கே கிறிஸ்துவ தேவாலயங்கள் தாக்கப்படுவதாகவும், இதனால் பி.ஜே.பி.யோடு இணைந்து தேர்தலைச் சந்திப்பதற்கு ஏற்ற சூழ்நிலை அமையவில்லை என்றும் அவர் ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.**

**மிசோராம் மக்கள், கிறிஸ்துவர்களாக இருப்பதால், பி.ஜே.பி.யோடு இணைந்து செயல்பட்டால் அது எதிர்மறை விளைவுகளையே உருவாக்கும். மேலும் மோடி, மிசோராமுக்கு வரும் அக்.30 அன்று தேர்தல் பிரச்சாரத்துக்கு வருகிறார். அப்போது அவரோடு தேர்தல் பிரச்சார மேடையினைப் பகிர்ந்து கொள்வதைத் தவிர்த்திட இருப்பதாகவும், மிசோராம் முதலமைச்சர் சோரம் தங்கா குறிப்பிட்டுள்ளார்.**

**40 சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட மிசோராம் சட்டமன்றத்தில் கடந்த தேர்தலில் ஒரே ஒரு இடத்தை மட்டுமே பா.ஜ.க. பெற்றிருந்தது.**

---

தமிழக ஆளுநர் வரம்புமீறி பேசியதற்கு டி.ஆர்.பாலு எம்.பி. விளக்கம் கொடுத்துள்ளார்!

# சுதந்திர போராட்டத் தியாகிகளுக்கு தி.மு.க. அரசு உரிய மரியாதை!

## புதுக்கோட்டையில் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, அக். 27-

புதுக்கோட்டை மாவட்டம் 9எ நத்தம்பண்ணை ஊராட்சியில் பகுதி நேர ரேஷன் கடையை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், ஆட்சியர் மெர்சி ரம்யா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் முத்துராஜா ஆகியோர் திறந்து வைத்தனர்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, ஆட்சி மாற்றம் ஏற்படும் போது கடந்த ஆட்சி செய்தவர்கள் தொடங்கிய திட்டத்தை ஆட்சி செய்பவர்கள் திறந்து வைப்பது வழக்கமான ஒன்று எடப்பாடி பழனிச்சாமி கூறுவது போன்று அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் தொடங்கிய திட்டத்தை தான் நாங்கள் தொடங்கி வைக்கிறோம் என்று கூறுவது தவறு. கிங்ஸ் மருத்துவமனை கலைஞர் நூற்றாண்டு நூலகம் உள்ளிட்ட பல திட்டங்கள் தி.மு.க. ஆட்சி காலத்தில் தொடங்கியதுதான் ஒரு சில திட்டங்கள் மட்டும் அ.தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டதை நாங்கள் தொடங்கி வைத்துள்ளோம். அது இயற்கையான ஒன்று.

ஒரு ஆளுநர் எப்படி நடந்து கொள்ள வேண்டும். எப்படி செயல்படக் கூடாது என்பதற்கு அளவுகோல் உள்ளது. ஆனால் தமிழக ஆளுநர் வரம்புமீறி பேசியதற்கு டி.ஆர்.பாலு எம்.பி. விளக்கம் கொடுத்துள்ளார்.



சுதந்திர போராட்டத் தியாகிகளுக்கு தி.மு.க. அரசு உரிய மரியாதை அளித்து வருகிறது. சுதந்திர போராட்டத் தியாகிகள் தலைவர்கள் ஆகியோர்களுக்கு நினைவு மண்டபங்கள் அமைத்து ஒவ்வொரு ஆண்டும் அவர்களது நினைவை விழாக்கள் எடுத்து நடத்தி வரும் ஒரே அரசு தி.மு.க. அரசுதான். இந்த வரலாறு எல்லாம் தமிழில் இருப்பதால் ஆளுநருக்கு புரியவில்லை அவர் யாரோ எழுதிக் கொடுத்ததை வாசிக்கிறார். காங்கிரஸ் தி.மு.க.வை வளர்க்க வேண்டியதில்லை, தி.மு.க. ஏற்கனவே வளர்ந்த கட்சி தான் நாங்கள் எங்களை வளர்த்துக் கொள்கிறோம். அவர்கள் அவர்களை வளர்த்துக் கொள்கிறார்கள். பா.ஜ.க.வின் B டீம் தான் அ.திமு.க., சிறுபான்மையர்கள் வாக்கு ஒருபோதும் அ.தி.மு.க.விற்கு கிடைக்காது. சிறுபான்மையின ருக்கு எதிராக சட்டங்கள் கொண்டு வந்த போது இ.பி.எஸ். எங்கே சென்றார். எங்கே போய் ஒடி ஒளிந்து கொண்டார்?

எடப்பாடி பழனிச்சாமி பிரதமராக அனைத்து வாய்ப்புகளும் உள்ளது என முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி கூறி இருப்பது, ரொம்ப மகிழ்ச்சியான செய்தி, அவர் எப்போதுமே நகைச்சுவையாக பேசக்கூடியவர், இதை ஒரு ஜோக்காக எடுத்துக் கொள்ளலாம். மகளிர் உரிமை திட்டத்தில் மாதந்தோறும் ரிவ்யூ செய்யப்படும் என்று அரசு உத்தரவிட்டது பொது மக்களுக்கு லாபம்தான். தகுதியான நபர்கள் இதன் மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டு அவர்களுக்கு உரிமைத் தொகை போய் சேரும் என்றார்.

---

‘தஞ்சாவூர் அருள்மிகு பெருவுடையார் திருக்கோயிலில் மாமன்னன் இராசராச சோழன் 1038வது ஆண்டு சதய விழா!

# தமிழ்நாடு அரசின் சார்பில் மாமன்னர் இராசராச சோழன் திருவுருவச் சிலைக்கு மரியாதை!

## மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப் - மாநகர மேயர் சண்.இராமநாதன் - விழா தலைவர் து.செல்வம் மாலை அணிவித்தனர்!

தஞ்சாவூர், அக்.27-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க தஞ்சாவூர் அருள் மிகு பெருவுடையார் திருக்கோயிலில் மாமன்னன் இராசராச சோழன் அவர்களின் 1038வது ஆண்டு சதய விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில் மாமன்னர் இராசராச சோழன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

மாமன்னன் இராசராச சோழன் அவர்களின் பிறந்தநாள் தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் சதய விழாவாகக் கொண்டாடப்படும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பானது தஞ்சை மாவட்டத்திற்கு மேலும் ஒரு பெருமைச் சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது. திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே உரிமை பூண்ட பெருமன்னன் இராசராசன் கி.பி. 985இல் சோழப் பெருமன்னனாக அரியணையில் அமர்ந்தான். அழகிலும், அறிவிலும், ஆற்றலிலும், சிறந்து விளங்கிய இப்பெருமன்னன் இராசகேசரி என்ற பட்டம் பூண்டு கி.பி. 1014 வரை ஆட்சி புரிந்து தமிழகத்தின் பெருமையை உலகறியச் செய்தனன். தந்தை வழியில் தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களுள் ஒருவரான செம்பியர் குடியிலும் தாய் வழியில் சங்க காலத்திலிருந்து சிறந்த திருமுடிக்காரி போன்ற பெருந்தகை பிறந்த மலையமான் குடியையும் சேர்ந்த இப்பெருமகனின் இயற்பெயர் அருண்மொழி வர்மன் என்பதாகும். உலகமே வியக்கும் இராசராசேச்சுரம் என்றும் தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயிலை எடுத்த சிவபாதசேகரனாம் இப்பெருமன்னன் வைணவம், சமணம், பௌத்தம் போன்ற எல்லா சமயங்களுக்கும் ஆக்கம் அளித்து சமநோக்கோடு வாழ்ந்து காட்டியவன்.

தில்லையில் செல்லரித்த நிலையில் மூடிக்கிடந்த மூவர் தேவாரப் பாக்களை நம்பியாண்டார் நம்பியின் துணை கொண்டு மீட்டு எல்லாக் கோயில்களிலும் தேவாரம் ஓதச் செய்ததோடு, சைவ ஆகமங்கள் எனப் போற்றப் பெறும் திருமுறைகளைத் தொகுத்து அளித்த பெருமகனும் இராசராச சோழனே.

இத்தகைய பெருமைக்குரிய பெருமன்னனின் சதயப் பெருவிழா அம்மன்னன் முடிசூடிய 1038ஆவது ஆண்டான 2023 அக்டோபர் 25 ஆம் தேதி கொண்டாடும் வண்ணம் தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயிலில் சதயவிழா நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிகழ்ச்சியில் தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண்.ராமநாதன், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத், சதய விழாக் குழுத்தலைவர் .து. செல்வம், பரம்பரை அறங்காவலர் இராஜா ஸ்ரீ பாபாஜி ராஜா போன்ஸ்லே, துணை மேயர் மரு. அஞ்சுகம் பூபதி, துணைத் தலைவர் எஸ்.சந்திரசேகர மேத்தா, தருமபுர ஆதீனம் குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமி, தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் இரா. மகேஸ்வரி, தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் இலக்கியா, மாநகர நல அலுவலர் மரு.சுபாஷ் காந்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




தஞ்சாவூர் அருள்மிகு பெருவுடையார் திருக்கோயில் மாமன்னன் இராசராச சோழனின் 1038 ஆம் ஆண்டு சதயவிழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச்சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தீபக் ஜேக்கப், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத், சதயவிழாக் குழுத் தலைவர் து.செல்வம், மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், தருமபுர ஆதினம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், பரம்பரை அறங்காவலர் சி.பாபாஜி ராஜா பான்ஸ்லே, மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, சதயவிழாக்குழு துணைத் தலைவர் எஸ்.சி.மேத்தா, மாநகராட்சி ஆணையர் ஆர்.மகேஸ்வரி மற்றும் பலர் உடன் உள்ளனர்.

---

பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில்

# பயணிகள் ஆட்டோ தொழிலாளர்கள் சங்க துவக்க விழா!

## கழகத் துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. - அமைச்சர் சா.சி. சிவசங்கர் கலந்துகொண்டனர்!

பெரம்பலூர், அக். 27 -

பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் 3+1 பயணிகள் ஆட்டோ தொழிலாளர்கள் சங்க துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

தி.மு.க. கொடியேற்றி, தொ.மு.ச. கொடியேற்றி, தொ.மு.ச. பெயர் பலகையை திறந்து வைத்து கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.

பெரம்பலூர் ஒன்றியக் கழகச் செயலாளரும், சங்கத்தின் கௌரவ தலைவருமான எம்.ராஜ்குமார் தலைமை வகித்தார். மாவட்ட பொதுச் செயலாளர் அ.செல்லதுரை வரவேற்புரையாற்றினார். தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் தலைவர் கே.கே.குமார், மாவட்டக் கவுன்சில் பொருளாளர் பெ.வேணுகோபால், தொ.மு.ச. மாவட்டக் கவுன்சில் துணைத் தலைவர்கள் மு.சி. செல்வராஜ், எம்.குள்ளபெத்தான், மாவட்ட தலைவர் பி.செந்தில், மாவட்ட பொருளாளர் சி. சுப்ரமணி, அமைப்பு செயலாளர் பா.சுகுமாறன், மாவட்ட துணைத் தலைவர்கள் சி.கனகராஜ், ஆர்.தண்டபாணி, அ. பாஸ்கரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் பி. ராஜேந்திரன், கே.பாஸ்கர், கே.மணிமாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய அமைச்சர், கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு தி.மு.க.கொடி மற்றும் தொ.மு.ச.கொடியேற்றி வைத்து,முத்தமிழறஞர் கலைஞர் உருவப்படத்திற்கு மரியாதை செலுத்தி, தொ.மு.ச. பெயர்ப்பலகையை திறந்து வைத்தனர்.

இதில் மாவட்ட கழகச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன்.சம்பத் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தொ.மு.ச. மாவட்டக் கவுன்சில் செயலாளர் ஆர். ரெங்கசாமி நன்றியுரையாற்றினார்.



நாமக்கல் மேற்கு மாவட்டம், திருச்செங்கோடு நகராட்சியில் ரூ.24 லட்சம் மதிப்பிலான வளர்ச்சி திட்ட பணிகளை நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தார். இந்நிகழ்ச்சியில் திருச்செங்கோடு நகர மன்றத் தலைவர் நளினி சுரேஷ்பாபு, துணைத் தலைவர் தா.கார்த்திகேயன், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் சுரேஷ்பாபு, நகராட்சி பொறியாளர் சரவணன் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து! முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமி - அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலை!

# வழக்குரைஞர் ஏ.என்.புருஷோத்தம் புதல்வி - டாக்டர் பூர்ணிமா எம்.சி. மணவிழா!

## தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் நடத்தி வைக்கிறார் !

சென்னை, அக். 27 -

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழக்குரைஞர் ஏ.என். புருஷோத்தம் புதல்வியும் கழக மாமன்ற உறுப்பினருமான டாக்டர் பூர்ணிமா - கே.ஏ.இராதாகிருஷ்ணன் ஆகியோரின் மணவிழாவினை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.



வழக்குரைஞர் ஏ.என். புருஷோத்தம் - ஏ.பி.சாந்தி ஆகியோரின் புதல்வியும், அம்பத்தூர் தலைமை பொதுக்குழு உறுப்பினரும் 87வது மாமன்ற கழக உறுப்பினருமான டாக்டர் ஏ.பி. பூர்ணிமா - இன்ஜினியர் கே.ஏ. இராதாகிருஷ்ணன் ஆகியோரின் மணவிழா இன்று (27.10.2023 - வெள்ளிக் கிழமை) காலை 9 மணிக்கு சென்னை எழும்பூர் இராணிமெய்யம்மை அரங்கத்தில் நடைபெறுகின்றது.

மணவிழாவிற்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று மணவிழாவினை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்துரை வழங்குகிறார்.

முன்னாள் அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மேயர் பிரியா ராஜன், அம்பத்தூர் வடக்கு பகுதிச் செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., அ. வெற்றி அழகன் எம்.எல்.ஏ., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., துணைமேயர் மு.மகேஷ் குமார், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக வாரியத் தலைவர் ப.ரங்கநாதன், பி.கே. மூர்த்தி எம்.சி., அம்பத்தூர் தெற்கு பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி. அம்பத்தூர் கிழக்கு பகுதிச் செயலாளர், எம். டி.ஆர்.நாகராஜ், எல்.பி. எப்.மோகன், ஜெ.பாலமுருகன், வி.ரமேஷ் என்றகி நீலகண்டன் எம்.சி., டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி., ஜி.வி.நாகவள்ளி ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

மணமக்களை வாழ்த்தி கழகப் பொருளாளரும் கழக நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர் பாலு, அமைச்சர்கள் கே. என்.நேரு, மா.சுப்பிர மணியன், ஒன்றிய முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறன் எம்.பி.

ஒன்றிய முன்னாள் அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன், எம்.பி., நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, பி.வில்சன், என்.ஆர்.இளங்கோ, இரா.கிரிராஜன், தமிழச்சி தங்க பாண்டியன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆர்.வெங்கடபதி, டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ., திருவள்ளூர் மாவட்ட ஊராட்சித் தலைவர் கே.உமாமகேஸ்வரி, மூத்த வழக்கறிஞர்கள் ஆர்.விடுதலை, என்.கண்ணதாசன், வி.ஆர்.எஸ். சம்பத் மற்றும் தொழிலதிபர்கள் ஆர்.எஸ்.முனிரத்தினம், சி.சி.பார்த்திபன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர். 87 வது வட்டச் செயலாளர் த.பிரகாஷ் குமார், 84 வது வட்டச் செயலாளர் த.வ.லால் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

மணவிழா வரவேற்பு 27.10.2023 வெள்ளிக் கிழமை காலை 10.30 மணி முதல் 2 மணிவரை இன்னிசை நிகழ்ச்சியுடன் நடைபெறுகிறது.

### தமிழ்நாட்டில் 2 நாட்கள் கனமழைக்கு வாய்ப்பு!

**சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்!**

சென்னை, அக். 27 -

தமிழ்நாட்டில் 2 நாட்கள் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. தென்மேற்கு வங்கக் கடலை ஒட்டிய தெற்கு ஆந்திர கடலோர பகுதிகளில் ஒரு வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

29.10.2023: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். மதுரை, திண்டுக்கல், திருச்சிராப் பள்ளி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்க்கோட்டை, விழுப்பு ரம், கடலூர், சிவகங்கை, பெரம்பலூர், அரியலூர், கள்ளக் குறிச்சி மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக் கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. 30.10.2023 மற்றும் 31.10.2023: தமிழ் நாடு, புதுச்சேரி மற்றும் காரைக் கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். இந்நிலையில் தமிழ் நாடு, கேரளாவில் அக்டோபர் 29 மற்றும் 30ம் தேதிகளில் கனமழைக்கும், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக் கால் பகுதிகளில் மிதமான மழைக்கும் வாய்ப்பு உள்ளது.

## நாமக்கல் மேற்கு மாவட்டம்

# குமாரபாளையம் வடக்கு நகரக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

நாமக்கல் மேற்கு மாவட்டம், குமாரபாளையம் வடக்கு நகரக் கழகப் பொறுப்பாளர் எம்.செல்வம் அவர்களை, அவர் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **டி.விஜயகண்ணன்**, (5/10/5, காந்திநகர், குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம் 638 183.)அவர்கள், குமாரபாளையம் வடக்கு நகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நகரக் கழக அமைப்பின் பிறநிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 25.10.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

நினைவை விட்டு நீங்கா எங்கள் நெஞ்சத்திற்கு

# 11-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
05.09.1939



நினைவு
27.10.2012

# A.L.சுப்பிரமணியன்

B.Sc.,B.L.,Ex. M.L.A,Ex.Mayor

**தி.மு.கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்**

செயலர், திருநெல்வேலி கல்வி சங்கம் ம.தி.தா.இந்துக்கல்லூரி மற்றும் மேல்நிலைப்பள்ளி
E.X.தலைவர் திருநெல்வேலி வழக்கறிஞர் சங்கம்.

**A.L.S.லெட்சுமணன் A.L.S.சண்முகம்**

தலைமை செயற்குழு உறுப்பினர்,
முன்னாள் மாநகர செயலாளர்,
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திருநெல்வேலி.

இதுவரை ரூ.5 கோடியே 85 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் மருத்துவம் - உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டுவருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகைவழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி ரூ. 5 கோடியே 85 லட்சத்து 90 ஆயிரம். இந்தமாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் 8 பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 25.10.2023 அன்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்து போகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப் படுகிறது..

## நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | ஜெ. ஆல்பட், கே.தெரு 416 முதல் 1516, கொருக்குப்பேட்டை, சென்னை – 21 | - 25,000/- |
| 2. | ச. காசி, சோலையப்பன் தெரு, தியாகராயர் நகர், சென்னை –17 | - 25,000/- |
| 3. | பி. ஹேமாவதி, தாசர்புரம் 3வது தெரு, திருநின்றவூர், திருவள்ளூர் – 602024. | - 25,000/- |
| 4. | என்.சம்பத், பெரிய தெரு, தேசமுகிப்பேட்டை, திருக்கழுக்குன்றம், செங்கல்பட்டு | - 25,000/- |
| 5. | முக்தார் அகமத், முகமத்புரா முதல் தெரு 3வது சந்து, ஆம்பூர், திருப்பத்தூர் | - 25,000/- |
| 6. | என்.கனகராஜ், கருப்பட்டிச்சேரி, தத்துவாஞ்சேரி, திருவிடைமருதூர், தஞ்சை | - 25,000/- |
| 7. | எம்.நாச்சிமுத்து, முத்துவேணிநகர் வாங்கல்ரோடு, பாலம்மாள்புரம், கரூர் | - 25,000/- |
| 8. | வி. சேகர், வடக்குமட விளாகத் தெரு, இலால்குடி, திருச்சி – 621 601. | - 25,000/- |
| | **மொத்தம்** | **ரூ. 2,00,000/-** |

குடிநீர் வாரிய பராமரிப்புப் பணிகள்!

### சிந்தாதிரிபேட்டையில் இணையதள வழியாக செயல்படும் சேவைகள் செயல்படாது!

**சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!**

சென்னை, அக்.27–

சென்னைக் குடிநீர் வாரிய சிந்தாதிரிப்பேட்டை தலைமை அலுவலகத் தரவு மையத்தில் (Data Centre) அவசர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் 28.10.2023 சனிக்கிழமை மற்றும் 29.10.2023 ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் இணையதள வழியாக பெறப்படும் சேவைகளாகிய குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி செலுத்துதல், புகார்களை பதிவு செய்தல், கட்டணம் செலுத்தி லாரிகள் மூலம் பெறப்படும் குடிநீர் (Dial for Water), மற்றும் கழிவுநீர் அகற்ற முன்பதிவு செய்தல் (Dial for Septic Tank clearance), உள்ளிட்ட அனைத்து சேவைகள் செயல்படாது.


மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் பாராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டு 30.10.2023 காலை 09.00 மணி முதல் வழக்கம் போல் இணையதள சேவைகள் அனைத்தும் செயல்படும் என்று குடிநீர் வாரியம் அறிவித்துள்ளது.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஏ.எல். சுப்பிரமணியன்

**அக்டோபர் 27 (2012)**



பேரறிஞர் அண்ணா அவர்களின் காலந்தொட்டு, மாணவப் பருவத்தில் இருந்தே தனது வாழ்க்கையை கழகப் பணிகளுக்காகவே ஒப்படைத்து அண்ணாவின் இதயத்தில் இடம் பிடித்தவர்.

தி.மு.க. உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் – கழக சட்டத்துறைச் செயலாளர் ஆகிய கழகப் பொறுப்புகளை வகித்தவர்.

நெல்லை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு மூன்று முறை வென்று, சட்டப்பேரவை உறுப்பினராகப் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

நெல்லை மாநகராட்சியின் முதல்மேயராக பொறுப்பேற்று 2006ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை சிறப்பாகப் பணியாற்றியவர்.


“நெல்லைச் சீமையே தனது அன்பு உடன்பிறப்புக்களில் ஒருவரை இழந்து நெஞ்சம் கலங்கி நிற்கிறது. யாருக்கு நான் எப்படி ஆறுதல் கூறுவேன்? எனக்கு நானே ஆறுதல் கூறிக் கொள்கிறேன்” என தலைவர் கலைஞர் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திருக்கோயில்களில்

# உபயதாரர்கள் நிதியின் மூலம் ரூ.800 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள்!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!



சென்னை, அக்.27-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (25.10.2023) கோயம்பேடு, குறுங்காலீஸ்வரர் மற்றும் வைகுண்டவாசப் பெருமாள் திருக்கோயிலில் ரூ.53.90 லட்சம் மதிப்பீட்டில் புதிய மரத்தேர் உருவாக்கும் திருப்பணி, ரூ.85.40 லட்சம் மதிப்பீட்டிலான ஐந்து நிலை இராஜ கோபுரம் மற்றும் ரூ. 49 இலட்சம் மதிப்பீட்டிலான அன்னதானக் கூடம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தார்.

பின்னர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ஆட்சி பொறுப்பேற்றபின் இந்து சமய அறநிலையத்துறையில் பல்வேறு முனைப்பான பணிகள் நடைபெற்று வருவதை அனைவரும் அறிவீர்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்றபின் 6 இராஜகோபுரங்கள் கட்டி முடிக்கப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளன. தற்போது 6 இராஜகோபுரங்கள் கட்டுமான பணி நடைபெற்று கொண்டிருக்கிறது. 15 இராஜகோபுர திருப்பணிகள் தொடங்கப்படும் நிலையில் இருக்கின்றன. அதேபோல் திருத்தேர்களை எடுத்துக் கொண்டால் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு ரூ.41.53 கோடி மதிப்பீட்டில் 71 புதிய மரத்தேர்கள் உருவாக்கிடவும், ரூ.7.83 கோடி மதிப்பீட்டில் 41 மரத்தேர்களை மராமத்துப் பணிகள் மேற்கொள்ளவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டம், பூவரசங்குப்பம், சென்னை, சிந்தாரிப்பேட்டை, காஞ்சிபுரம் மாவட்டம், சீட்டனஞ்சேரி போன்ற திருக்கோயில்களில் பல ஆண்டு காலமாக ஓடாமலிருந்த திருத்தேர்கள் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் வீதியுலா வந்தன. அதேபோல் இராமேசுவரம், சமயபுரம், திருத்தணி ஆகிய திருக்கோயில்களில் பல ஆண்டுகளாக ஓடாமல் இருந்த தங்கத்தேர் பக்தர்களின் நேர்த்திக்கடன் உலா வரச் செய்வதற்கு இந்த ஆட்சியில்தான்.

அந்த வகையில் கோயம்பேடு, குறுங்காலீஸ்வரர் மற்றும் வைகுண்டவாசப் பெருமாள் திருக்கோயிலுக்கு உபயதாரர் நிதி மற்றும் திருக்கோயில் நிதியின் மூலம் ரூ.53.90 லட்சம் மதிப்பீட்டில் புதிய மரத்தேர் உருவாக்கும் திருப்பணி, ரூ.85.40 லட்சம் மதிப்பீட்டிலான ஐந்து நிலை இராஜ கோபுரம் மற்றும் ரூ. 49 இலட்சம் மதிப்பீட்டிலான அன்னதானக் கூடம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த திருக்கோயிலில் சுமார் ரூ. 4.08 கோடி மதிப்பீட்டில் 14 திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் பார்க்கின்ற போது இந்த ஆட்சி காலத்தில் தான் அதிகமான அளவிற்கு உபயதாரர்கள் திருப்பணிகள் செய்ய முன் வருகிறார்கள் என்பதை அறியலாம். உபயதாரர்கள் மூலம் இதுவரை ரூ.800 கோடி அளவிற்கு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதில் சட்டமன்ற அறிவிப்பு பணிகளுக்கு ரூ.600 கோடியிலும், அறிவிப்பில்லாத பணிகளுக்கு ரூ.200 கோடியிலும் பணிகள் நடைபெறுகின்றன. உபயதாரர்கள் அளிக்கின்ற தொகை முழுமையாக அவர்களின் எண்ணத்திற்கேற்றார்போல் செலவிடப்படும் என்ற இந்த அரசின் மீதான நம்பிக்கையே அதற்கு காரணமாகும்.

### சொத்துக்கள் மீட்கும் பணி!

இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 1,093 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றிருக்கின்றது. திருக்கோயில்களுக்கு சொந்தமான சொத்துக்களை மீட்கும் பணிகளில் இதுவரை ரூ.5472 கோடி மதிப்பிலான 5,820 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றிலேயே குடமுழுக்கு பணிகள் என்றாலும், நில மீட்பு பணிகள் என்றாலும் இந்த ஆட்சியில் செய்தது போல் இதற்கு முன் நடைபெற்றது இல்லை என பக்தர்கள் முழு மகிழ்ச்சியோடு வரவேற்றுக் கொண்டிருக்கின்றார்கள். திருக்கோயிலின் நிதி மற்றும் உபயதாரர்கள் நிதியின் மூலம் சுமார் 9,000க்கும் மேற்பட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த பணிகள் அனைத்தும் முழுமை அடைகின்ற போது இந்த ஆட்சியை பாராட்டாதவர்களே இருக்கமாட்டார்கள். அந்த அளவிற்கு எங்களின் செயல்பாடுகள் அமையும்.

மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயில் நிதியின் மூலம் ரூ.29 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் புதிய கலாச்சார மையம் குறித்து கூறப்படும் குற்றச்சாட்டு தவறானது. இது முழுமையாக பக்தர்களின் பயன்பாட்டிற்காக அத்திருக்கோயிலின் அறங்காவலர்களின் ஒப்புதலுடன் நமது கலை, கலாச்சாரம், பண்பாட்டை காக்கும் வகையில் அமைக்கப்படுகிறது. திருக்கோயிலின் நிதியை அப்படியே வைத்திருப்பதால் என்ன பலன் கிடைக்கப் போகின்றது? அதனைக் கொண்டு பக்தர்களின் மேம்பாட்டிற்காக செலவிடுவது குற்றமாகாது. ஆகவே சட்டத்திற்கு உட்பட்டு, அறங்காவலர் குழுவின் ஒப்புதலோடு அந்த நிதியை கலாச்சார மையத்திற்கு பயன்படுத்த இருக்கின்றார்கள்.

இதுவரை 1,093 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தி இருக்கிறோம். இப்பணி தொடர்ந்து கொண்டே இருக்கும். அதற்கு ஒரு எல்லையே கிடையாது. இந்த ஆட்சி ஏற்பட்டபின் 7,336 திருக்கோயில்களுக்கு மண்டல மற்றும் மாநில அளவிலான வல்லுநர் குழுக்களால் திருப்பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்படும். ஆகவே, 5 ஆண்டுகளில் வரலாறு காணாத அளவிற்கு குடமுழுக்குகள் இருக்கும்.

### ஒரு கால பூஜைத் திட்டம்!

கிராமப்புற திருக்கோயில்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள வழங்கப்பட்டு வந்த நிதியுதவி ரூ.2 லட்சமாக உயர்த்தப்பட்டு இதுவரை 2,500 கிராமப்புற திருக்கோயில்களுக்கும் 2,500 ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் வசிக்கின்ற பகுதியிலே இருக்கின்ற திருக்கோயில்களுக்கு தலா ரூ.2 லட்சம் வீதம் ரூ. 100 கோடி நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. அதேபோல ஒருகால பூஜை திட்டத்தில் திருக்கோயில்களுக்கு வழங்கப்பட்டு வந்த வைப்பு நிதி ஒரு லட்சம் ரூபாயிலிருந்து 2 லட்சமாக உயர்த்தப்பட்டு, இதுவரை 15,000 திருக்கோயில்கள் பயன்பெற்று வருகின்றன. இந்தாண்டு இத்திட்டத்திற்காக 2,000 திருக்கோயில்களை தேர்வு செய்வதற்கான பணிகள் விரைவுப்படுத்தப்பட்டுள்ளன. ஒருகால பூஜை திட்டத்தின் கீழ் பயன்பெறும் திருக்கோயில்களின் அர்ச்சகர்களுக்கு மாதாந்திர ஊக்கத்தொகையாக ரூ.1,000 இவ்வரசு பொறுப்பேற்ற பின் முதன்முறையாக வழங்கப்பட்டு வருகிறது.

இந்த திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் திருக்கோயில்கள் அத்தனையும் புனரமைக்கின்ற பணிகளில் முழு வீச்சோடு ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். 5 ஆண்டுகள் நிறைவுறுகின்ற போது அனைவரும் புருவத்தை உயர்த்தி, வசை பாடுபவர்களும் வாழ்த்துகின்ற ஒரு நல்ல சூழ்நிலை உருவாகும்.

### தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு ஆளுநரின் முட்டுக் கட்டை!

பொன்மாணிக்கவேல் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளால் பல அப்பாவிகள் சிறை சென்றார்கள். மீடியாவின் விளம்பரத்திற்காக இது போன்ற தவறான செய்திகளை அள்ளித் தெளித்துக் கொண்டிருக்கிறார். தற்போது பணியில் இல்லாத காலகட்டத்திலும் அவர் மீது சிபிஐ முதற்கொண்டு நீதிமன்ற வழக்குகள் நிறைய இருக்கின்றன. தன்னுடைய விளம்பரத்திற்காக துறையின் மீது தவறான குற்றச்சாட்டுகளை கூறிக் கொண்டு இருக்கின்றார். அவர் குற்றம் அல்லது தவறுகளை குறிப்பிட்டுச் சொன்னால் நிச்சயமாக அதற்கு விளக்கம் தரவும், அதன் மீது நடவடிக்கை எடுக்கவும் இந்து சமய அறநிலையத்துறை தயாராக இருக்கின்றது. யார் எந்த விதமான குற்றங்களை எங்களுக்கு சுட்டி காட்டினாலும் அதை நிறைவு செய்வதற்கு தயாராக இருக்கின்றோம்.

தமிழ்நாடு ஆளுநரை பொறுத்தளவில் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு எப்படி எல்லாம் முட்டுக்கட்டை போட முடியுமோ அப்படி எல்லாம் முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருக்கிறார். அவற்றை எல்லாம் முறியடித்து தமிழ்நாட்டை வளர்ச்சி பாதைக்கு முதலமைச்சர் அவர்கள் அழைத்துச் சென்று கொண்டிருக்கிறார். அவர் தமிழ்நாட்டினுடைய ஆளுநராக செயல்படவில்லை ஆர்.எஸ்.எஸ்.ன் மாநில தலைவராகவும், பாரதிய ஜனதா கட்சியின் மாநில தலைவராகவும், அவர்களுடைய கொள்கைகளைப் பின்பற்றி இந்த ஆட்சிக்கு எப்படி எல்லாம் தொந்தரவு தர முடியுமோ அந்த வகையில் தொந்தரவு கொடுத்து, மனிதனை பிரித்தாள்வது, சாதி, மத துவேஷங்களை இடுவது போன்றவற்றை தான் ஆளுநர் தன்னுடைய பணியாக மேற்கொண்டு இருக்கின்றார். ஆளுநருக்குண்டான பணிகளிலிருந்து அவர் தவறி விட்டு இதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் எ.எம்.வி.பிரபாகர் ராஜா, இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் லோகு, திருக்கோயில் செயல் அலுவலர் ஆர்.கேசவ ராஜன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## தமிழ்நாட்டில் நவம்பர் 4 ஆம் தேதி 38 மாவட்டங்களில்

# ‘நடப்போம் நலம் பெறுவோம்’ திட்டம்: முதல்வர் தொடங்கி வைக்கிறார்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!



சென்னை, அக்.27-

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி வருகின்ற 29.10.2023 தொடங்கி 31.12.2023 வரை 10 வார ஞாயிற்றுக்கிழமைகளில், வாரம் 1000 வீதம் தமிழ்நாடு முழுவதும் 10,000 மழைக்கால மருத்துவ முகாம் நடத்தப்படும் என்றும் தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் நடப்போம் நலம்பெறுவோம் - Health Walk திட்டம் வருகிற நவம்பர் 4ந்தேதிதொடங்கப்படும் என்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வருகின்ற நவம்பர் 4ந்தேதி தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் தொடங்கப்படவுள்ள "Health Walk" திட்டத்தின் கீழ் சென்னையில் நேற்று முன்தினம் (25.10.2023) அமைச்சர் மா.சுப்பிரமணியன் 8 கிலோ மீட்டர் தூரம் நடைபயிற்சி மேற்கொள்வதற்கான நடைபாதையை தேர்வு செய்து உறுதிபடுத்துவதற்கான ஆய்வு மேற்கொண்டார்கள்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களால் நவம்பர் திங்கள் 4ந்தேதி தமிழ்நாட்டில் பொது மக்களுக்கான சிறப்பான திட்டம் தொடங்கப்பட உள்ளது. முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48, இதயம் காப்போம், சிறுநீரக பாதுகாப்பு திட்டம், கலைஞரின் வருமுன்காப்போம் போன்ற பல்வேறு திட்டங்கள் மிகச் சிறப்பான வகையில் மக்களிடம் ஏகோபித்த பாராட்டுகளுடன் சிறப்பான இயங்கி கொண்டிருக்கிறது. அந்தவகையில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, ஜப்பான் நாட்டிற்கு JAICA நிதி ஆதாரத்திற்கு சென்றிருந்தபோது டோக்கியோவில் 8 கி.மீ தூரத்திற்கான நடைபாதை அங்கு நடைமுறையில் இருக்கின்றது. அந்த நடைபாதையில் சாலையில் இரு பாதைகளிலும் மரங்கள் நடப்பட்டு ஓய்வுக்கான இருக்கைகள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு கி.மீ தூரத்திற்கும் கி.மீ பலகைகள் அமைக்கப்பட்டு நடந்தால் கிடைக்கும் பயன்கள் பற்றிய பதாகைகள் வைக்கப்பட்டிருந்தது.

அதேப்போல் தமிழ்நாட்டிலும் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் இந்த திட்டத்தினை நடைமுறைப்படுத்திட வேண்டும் என்கின்ற வகையில் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே உடற்பயிற்சி சம்பந்தமான விழிப்புணர்வு பணிகளில் முன்னுதாரணமாக இருந்துக் கொண்டிருப்பவர். எனவே அவருடைய வழிகாட்டுதலின்படி, நிதிநிலை அறிக்கையில் 38 மாவட்டங்களிலும் Health Walk System தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் இப்பணிகளுக்கான இடத்தினை தேர்வு செய்து அப்பணிகளை மேம்படுத்துவதற்குரிய பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் சென்னையில் 8 கி.மீ தூரத்திற்கான நடைபாதைகள் எங்கே அமைந்தால் சிறப்பாக இருக்கும் என்கின்ற வகையில் உயரலுவலர்களுடன் ஆலோசித்து கடந்த மாதம் இந்த சாலையை தேர்வு செய்தோம். எனவே இந்த இடத்தினை தேர்வு செய்தபிறகு பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் இந்த சாலை புதுப்பிக்கப்பட்டு இரண்டு பக்கமும் நடைபாதைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே இப்பணிகள் முடிவுற்றவுடன் வருகின்ற நவம்பர் 4ந்தேதி முதலமைச்சர் அவர்களால் முத்துலட்சுமி பார்க் என்கின்ற இந்த இடத்தில் தொடங்கி பெசன்ட் அவென்யூ சாலை, கடற்கரை சாலை சென்று மீண்டும் சர்ச் ரோடு, அன்னை வேளாங்கண்ணி ஆலயம் வழி, 2nd Avenue, 3rd Avenue ஆல்கார்ட் எதிரில் யூடர்ன் செய்து திரும்பவும் இதே இடத்திற்கு வருவது. இப்படி வந்தால் 8 கி.மீ தூரத்திற்கு இது அடங்கும். ஒவ்வொரு நாளும் 8 கி.மீ தூரம் நடந்தால் 10,000 அடி தூரம் எடுத்து வைக்கும் நிகழ்வு நடக்கும். எனவே 10,000 அடி தூரம் நடப்பது ஒவ்வொருவருக்கும் ஆரோக்கியத்தை கொடுக்கும். இந்த நடைபாதை ஆய்வில் காவல் துறை துணை ஆணையர் (அடையார்) அவர்களும் கலந்து கொண்டுள்ளார். அவரும்கூட ஒவ்வொரு நாளும் இந்த சாலையைப் பொறுத்தவரை காலை 5 மணி தொடங்கி 8 மணி வரை கனரக வாகனம் போக்குவரத்திற்கு தடைவிதிக்கப்படுகிறது என்று அறிவித்திருக்கிறார்கள். மக்கள் மிக எளிதாக நடப்பதற்கும், அச்சமில்லாமல் நடப்பதற்கும் இந்த சாலை பயன்பட உள்ளது. குறிப்பாக வயதானவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையவுள்ளது. இந்த 8 கி.மீ தூரத்திற்கான இடத்தில் 24 அடி தூரத்திற்கான வரவேற்பு வளைவு அமையவிருக்கிறது. Start Point தொடங்கி Finish point வரை இந்த வளைவு இருக்கும். இந்த வளைவு பசுமையான சாலை என்பதால் பசுமையாக இருக்க வேண்டும் என்பதால் பசுமை பகுதிகள் இணைக்கப்பட இருக்கிறது.

அதேபோல் நடப்பவர்கள் தங்களது செல்லப்பிராணிகளுடன் சென்று சுற்றிக்காட்டுவதற்கு ஏதுவாக ஒரு சில இடங்களில் சிலைகள் அமைக்கப்படவிருக்கிறது. இப்பணிகள் அனைத்தும் வரும் நவம்பர் மாதம் 3ந்தேதிக்குள் முடிக்கப்படும். மேலும் 4ந்தேதி காலை 6 மணிக்கு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால் இந்த இடத்திலிருந்து நடந்து கடற்கரை சாலை வழியாக சென்று தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் Health Walk systemத்தினை தொடங்கி வைக்கிறார்கள். மற்ற மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட அமைச்சர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் Health Walk Systemத்தில் பங்கேற்க உள்ளார்கள். இந்த திறப்பு விழாவில் சென்னையில் உள்ள நடப்போர் நலச்சங்கங்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக அந்தந்த பகுதியில் உள்ளவர்களுக்கு நடப்பதற்கு அழைப்பிதழ் வழங்க உள்ளார்கள். ஏறத்தாழ 5000க்கும் மேற்பட்ட சென்னையில் நடைபயிற்சி மேற்கொள்ளும் பிரபலங்கள் பலர் கலந்து கொள்ள உள்ளார்கள்.

### 10,000 மழைக்கால மருத்துவ முகாம்!

வடகிழக்கு பருவமழை கடந்த 20.10.2023 முதல் தொடங்கி உள்ளது. அனைத்து இடங்களிலும் மழை பரவலாக பெய்து வருகின்றது. இந்த வடகிழக்கு பருவமழை காலங்களில் தான் மழைக்கால நோய் பாதிப்புகள் தொடங்குகின்றன. குறிப்பாக மலேரியா, டெங்கு, காலரா, சேற்றுப்புண், தொண்டை வலி, சளி போன்ற பிரச்சினைகள் மழைக்காலங்களில்தான் அதிகமாக வரும். எனவே இந்த மழைக்காலங்களில் வரும் நோய்கள் தவிர்க்க முடியாத ஒன்று.

ஏனென்றால் கொசு உற்பத்தி அதிகமாகவது மழைக் காலங்களில்தான். இத்தகைய நன்னீரில் உருவாகும் ஏடிஸ் என்கின்ற கொசுக்கள் மூலமாக டெங்கு போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றது. தமிழ்நாட்டினைப் பொறுத்தவரை டெங்கு பெரிய அளவில் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. நேற்றுவரை 5600 டெங்கு பாதிப்புகள் கடந்த பத்து மாதங்களில் ஏற்பட்டிருக்கிறது. நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் டெங்கு பாதிப்பு அதிகமாக பாதிக்கப்படும் மாதங்கள் ஆகும். எனவே இந்த இரண்டு மாதங்களில் வருகின்ற பாதிப்புகள் இன்னும் 2000 வரை வருவதற்கான வாய்ப்புகள் உள்ளன. நேற்றுவரை மருத்துவமனையில் இருப்பவர்கள் எண்ணிக்கை 490 பேர். இதுவரை 10 மாதங்களில் இறந்தவர்கள் எண்ணிக்கை 5 பேர். எனவே இந்த மழைக்காலங்களில் ஏற்படும் நோய்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வருகின்ற 29.10.2023 தொடங்கி 05.11.2023, 11.11.2023, 19.11.2023, 26.11.2023, 03.12.2023, 10.12.2023, 17.12.2023, 24.12.2023, 31.12.2023 அதாவது அக்டோபர் மாதம் முதல் நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் சில குறிப்பிட்ட 10 வாரங்களில் உள்ள ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் 1000 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. ஆக டிசம்பர் மாதம் இறுதிக்குள் பத்து வாரங்களில் 10,000 இடங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது.

மழைக்கால மருத்துவ சிறப்பு முகாம்கள் 10,000 இடங்களில் 10 வாரங்கள் தொடர்ச்சியாக நடத்தப்படுவது என்பது மருத்துவத் துறை வரலாற்றில் இதுவே முதன்முறை.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

---

## டாக்டர் அம்பேத்கர் விருது பெற விரும்புவோர் கவனத்திற்கு!

### ஆதிதிராவிடர் நலத்துறை அறிவிப்பு!

சென்னை, அக்.27-

தமிழ்நாட்டில் பட்டியல் இனமக்களின்வாழ்க்கைமுன்னேற்றத்திற்காக பலர் அரிய தொண்டாற்றிவருகிறார்கள். பட்டியல்இனமக்களின்முன்னேற்றத்திற்காக தங்களை இணைத்துக்கொண்டு அவர்கள்ஆற்றிவரும்அரியதொண்டுகளை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவருக்குஆண்டுதோறும்டாக்டர்அம்பேத்கர்விருதுவழங்கி தமிழ்நாடு அரசு சிறப்பித்து வருகிறது.

அவ்வகையில் 2023 ஆம் ஆண்டு டாக்டர் அம்பேத்கர் விருதுபெறவிரும்புவோர்தங்களைப் பற்றிய முழு விவரங்களுடன்விண்ணப்பிக்கலாம். www.tn.gov.in/ta/forms/Deptname/1என்றஇணையதளத்திலிருந்து இவ்விருதுக்கான விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.ஆதிதிராவிடர்நலஇயக்குநர் அலுவலகம் சென்னை அல்லது சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திலும் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என ஆதிதிராவிடர் நலத்துறை தெரிவித்துள்ளது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா டி. குலசேகரன்

### அக்டோபர் 27 (2001)



காஞ்சிபுரம் மாவட்டம், வாலாசாபாத் ஒன்றியம், பரந்தூர் ஒன்றியத்தில் கிளைச் செயலாளர், ஒன்றிய பிரதிநிதி, மாவட்ட பிரதிநிதி, தலைமை பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட கழகப் பொறுப்புகளை வகித்தவர்.

பஞ்சாயத்து தலைவர், ஒன்றிய பெருந்தலைவர், மாவட்ட வளர்ச்சி குழு உறுப்பினர், மாவட்ட வேளாண்மை பணி நிலையம் தலைவர் உள்ளிட்ட மக்கள் நலப் பணிகளில் ஈடுபட்டவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர். இது தவிர கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

# தி. மு. க வழக்கறிஞர் அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## மூன்றாவது பட்டியல்!

### தி.மு.க. வழக்கறிஞர் அணிச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ அறிவிப்பு!

**கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. வழக்கறிஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.**

**நீலகிரி மாவட்டம்**

**தலைவர்** - பி. சந்திரபோஸ், பி.ஏ. பி.எல்., 11, ராமலட்சுமி காம்பிளக்ஸ் உதகை, நீலகிரி.

**துணைத் தலைவர்** : ப. குயிலரசன், பி.ஏ. பி.எல்., காந்தி நகர், உபதலை, குன்னூர், நீலகிரி.

**அமைப்பாளர்**: ந. சிவசுப்ரமணியம், பி.ஏ. பி.எல்., பந்தலூர், நீலகிரி.

**துணை அமைப்பாளர்கள்**: ஐ. மணிகுமார், பி.காம். பி.எல்., 3/606, தும்பூர், கோத்தகிரி, நீலகிரி. வே. ரகு (எ) கிருஷ்ண குமார், பி.ஏ. பி.எல்., 12/734, காளம்புழா, செவிடிப் பேட்டை, கூடலூர், நீலகிரி. ஆர். கீர்த்தனா, பி.ஏ. பி.எல்., 252, சீகூர் சாலை, உதகை, நீலகிரி. வி. செந்தில்குமார், பி.ஏ. பி.எல்., 208, மிட்டல் பில்டிங், பாலகொலா அஞ்சல், குன்னூர், நீலகிரி. கே. ஸ்ரீஜேஷ், பி.ஏ., எல்.எல்.பி., 253, முதல்மைல், கூடலூர், நீலகிரி.

**புதுச்சேரி மாநிலம்**

**தலைவர்** : ச. லோக கணேசன், எம்.ஏ. பி.எல்., 48, நான்காவது தெரு, அன்னை தெரசா நகர், மூலக்குளம் புதுச்சேரி - 605010.

**துணைத் தலைவர்**: பெ. தாமோதரன், பி.ஏ. பி.எல். எம்.எல்., 20, மாரியம்மன் கோவில் வீதி, அரும்பார்த்தபுரம் பேட், புதுச்சேரி - 605110.

**அமைப்பாளர்**: ச. பரிமளம், பி.ஏ. எல்.எல்.பி., 26, 3வது குறுக்குத் தெரு, மேற்கு கிருஷ்ணா நகர், புதுச்சேரி - 605008.

**துணை அமைப்பாளர்கள்** : கே.என்.பி. சந்தோஷ்குமார், எல்.எல்.பி., 97, சுந்தரமேஸ்திரி வீதி, கொசப்பாளையம், புதுச்சேரி - 605013. வி.எம்.பி. முருகையன், எம்.ஏ. பி.எல்., பிஜிடிஎப்எல்., 4, நடுத் தெரு, குருமாம்பேட், புதுச்சேரி - 605009. ச. சுகந்தி, பி.ஏ. எல்.எல்.எம். 34, காமன் கோவில் தெரு, ஜி.என். பாளையம், அரும்பார்த்தபுரம், புதுச்சேரி - 605010. எஸ்.ஏ. சண்முகசுந்தரம், எம்.ஏ. பி.எட். எல்.எல்.பி., 6, மாரியம்மன் கோவில் தெரு, பெத்து செட்டிப்பேட்டை, இலாசுப்பேட்டை, புதுச்சேரி - 605008. அ. ஞானராஜன், பி.ஏ. எல்.எல்.பி., 6, கருணாகர பிள்ளை தெரு, குயவர்பாளையம், புதுச்சேரி - 605013.

**புதுச்சேரி - காரைக்கால் மாநிலம்**

**தலைவர்** : பி. சிமியோன்ராஜ் 95, 4வது குறுக்குத் தெரு, நேத்தாஜி நகர், காரைக்கால்.

**துணைத் தலைவர்**: சி. ராஜசேகர் பனங்கொல்லைத் தெரு, 122, சேத்திலால் நகர், காரைக்கால்.

**அமைப்பாளர்**: எஸ்.ஆர். வெற்றிசெல்வன் 1/1, வீராசாமி நாயக்கர் தெரு, காரைக்கால்.

**துணை அமைப்பாளர்கள்**: ஜெ. ராபர்ட் 5, சிவன் கோவில் தெரு, தக்களூர், திருநள்ளார், காரைக்கால். எஸ். செந்தில்குமார் 7, காந்தி நகர், காக்காமொழி, கீழமனை - நிரவி, காரைக்கால். பி. கோபாலகிருஷ்ணன் 54, பிள்ளையார் கோவில் தெரு, கீழவாஞ்சூர், திருப்பட்டினம். ஆர். புவனேஷ் 63/2, வயல்கரை வீதி, காரைக்கால். ஜெ. ஸ்டாலின் 55, சாவடி தெரு, வடமட்டம், கோட்டுச்சேரி.

**திருநெல்வேலி மாநகரம்**

**தலைவர்**: டி. ஜாஹீர் உசேன் 469, 16வது குறுக்குத் தெரு, கோடீஸ்வரன் நகர், திருநெல்வேலி.

**துணைத் தலைவர்** : ஜெ. நடராஜன் (எ) அருண் சங்கர், எம்.ஏ.பி.எல்., 633, 3வது மெயின் ரோடு, கோடீஸ்வரன் நகர், திருநெல்வேலி டவுண்.

**அமைப்பாளர்**: மு. சுரேஷ்குமார் 37, சக்தி நகர், சீவலப்பேரி ரோடு, பாளையங்கோட்டை.

**துணை அமைப்பாளர்கள்**: பி. கார்த்திக் தம்பான், 32ஏ, தெற்கு உச்சிமாகாளி அம்மன் கோவில் தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி. வி. அருள்ராஜா 14, எத்திராஜ் தெரு, மீனாட்சிபுரம், திருநெல்வேலி. பி. மணிகண்டன் 150, டி/2ஏ, நேதாஜி தெரு, காசி நகர், கே.டி.சி. நகர், வி.எம். சத்திரம், திருநெல்வேலி. ஆ. சண்முகசுந்தர் 359, 5வது நடுத் தெரு, தியாகராஜ நகர், திருநெல்வேலி. எஸ். சங்கர் கணேஷ் 20, காந்திமதி நகர், குறுக்குத்துறை ரோடு, டவுண், திருநெல்வேலி.

**திருத்தப் பட்டியல்**

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

திருநெல்வேலி மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகளாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவர்களுக்கு பதிலாக கீழ்கண்டவர்கள் திருநெல்வேலி மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகளாக நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் தொடர்ந்து செயல்படுவார்கள்.

**தலைவர்:** எஸ். ராஜா முகம்மது 2/2ஏ, மேத்தமார் பாளையம் 2வது தெரு, மேலப்பாளையம், திருநெல்வேலி.

**துணைத் தலைவர்** : அ. வின்சர் 2/10, வசந்தம் நகர், பெருமாள்புரம், திருநெல்வேலி.

**அமைப்பாளர்** : எம். காமினி தேவன், எம்.ஏ. எம்.எல்., 22/307, 4வது மெயின் தெரு, 3வது குறுக்குத் தெரு, சாந்தி நகர், பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

**துணை அமைப்பாளர்கள்:** எம். ஹரிபாலகிருஷ்ணன் 8, டேனியல் தாமஸ் தெரு, பாளையங்கோட்டை. ஆர். முருகன் குமார் முதலாளி நகர், வி.எம். சத்திரம் (மகாராஜ நகர்) பாளையங்கோட்டை. ஜி. வினோத்குமார் 12, அழகர் நகர், என்.ஜி.ஓ. - ஏ. காலனி திருநெல்வேலி. வி. ராமராஜ் 82, தெற்கு தெரு, தியாகராஜ நகர், திருநெல்வேலி. கே.எ.எ. கந்தசாமி 438ஏ, 20வது தெரு, சாந்தி நகர், திருநெல்வேலி.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை18.
நாள்: 25.10.2023

**என்.ஆர்.இளங்கோ**
செயலாளர்
தி.மு.க. வழக்கறிஞர் அணி


நாள் : 27.10.2023
வெள்ளிக்கிழமை
இடம் : திருநெல்வேலி
வீரத்தின் விளை நிலமான
நெல்லைச் சீமைக்கு
இளைஞர் அணிச்
செயல் வீரர்களின்
கூட்டத்திற்கும்,
கழக மூத்த
முன்னோடிகளுக்குப் பொற்கிழி
மற்றும் நலத்திட்ட உதவிகள்
வழங்கிடவும் வருகை தரும்
இளம் போராளி
கழக இளைஞர் அணிச் செயலாளர் –
மாண்புமிகு
ARASU ARTS
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக. வருக..
அன்புடன் வரவேற்கும்
தங்கம் தென்னரசு
விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்
நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர்



கழக முன்னோடிகளே வாரீர் !
முன்வந்து போற்றுவோம் வாரீர்!!
கலைஞர் 100
1924 - 2023
27.10.2023
திருநெல்வேலி மாவட்ட இளைஞர் அணி
செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் கழக முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கும் விழாவிற்கு வருகை தரும்...
கழக இளைஞரணி செயலாளர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களை
வருக! வருக!! என வரவேற்கிறோம்
தங்கம் தென்னரசு
நிதி மற்றும் மின்சாரத்துறை அமைச்சர், திருநெல்வேலி மாவட்ட பொறுப்பு அமைச்சர்
T.P.M.மைதீன்கான்
முன்னாள் அமைச்சர் & மாவட்ட பொறுப்பாளர்
திருநெல்வேலி மத்திய மாவட்ட தி.மு.க


நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில்
கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி
வழங்கவும் மற்றும் ஒருங்கிணைந்த நெல்லை
மாவட்ட இளைஞரணி செயல்வீரர் கூட்டத்தில்
பங்கேற்கவும் வருகைதரும்
27.10.2023,
வெள்ளிக்கிழமை,
நெல்லை
மாவட்டம்
கழக இளைஞர் அணிச் செயலாளர்,
மாண்புமிகு இளைஞர் நலன்,
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
உதயநிதி
ஸ்டாலின்
அவர்களே வருக..வருக...
என அன்புடன் வரவேற்கிறேன்...
2024 இல்
வெற்றி
நமக்கே
40/40
அலெக்ஸ் அப்பாவு
மாவட்ட மாணவரணி அமைப்பாளர், நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க


27.10.2023
திருநெல்வேலி மாவட்ட
இளைஞர் அணி
செயல்வீரர்கள் கூட்டம்
மற்றும் கழக முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கும் விழாவிற்கு
வருகை தரும்...
கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களை
வருக! வருக!! என வரவேற்கிறோம்
முரசொலி
அன்புடன்
மாண்புமிகு தங்கம் தென்னரசு
நிதி மற்றும் மனிதவளமேலாண்மைத்துறை அமைச்சர்
இரா. ஆவுடையப்பன் B.A.,B.L.,
மாவட்ட கழக செயலாளர்
திருநெல்வேலி கிழக்கு மாவட்ட தி.மு.க

## ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’

# சமுதாய வளர்ச்சிக்கு பெருந் தூண்டுகோலாக அமையும்!

## தேனியில் ரூ.21.83 கோடியில் நல உதவிகளை வழங்கி- அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தலைமையில், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் தேனி மாவட்ட ஊரக வளர்ச்சி அலுவலக கூட்டரங்கில் நேற்று முன்தினம் (25.10.2023) வளர்ச்சித் திட்டங்களின் பணி முன்னேற்றம் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. உடன் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மரு.தாரேஷ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரவீண் உ.டோங்கரே, சட்டமன்ற உறுப்பினர்கள் நா.இராமகிருஷ்ணன் (கம்பம்), ஆ.மகாராஜன் (ஆண்டிபட்டி), கே.எஸ்.சரவணகுமார் (பெரியகுளம்) உள்ளிட்ட பலர் உள்ளனர்.

தேனி, அக். 27-

**“கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் சமுதாய வளர்ச்சிக்கு பெரிய தூண்டுகோலாக அமையும்” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேனியில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றும் போது கூறினார்.**

தேனி மாவட்டம், முத்துதேவன்பட்டி வீட்டுவசதி சமுதாயக்கூடத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பல்வேறு துறைகளின் சார்பில் 2,813 பயனாளிகளுக்கு ரூ.21.83 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, முன்னிலையில் நேற்று முன்தினம் (25.10.2023) வழங்கினார்.

இந்நிகழ்வில் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மரு.தரேஷ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் என்.இராமகிருஷ்ணன் (கம்பம்), கே.எஸ்.சரவணக்குமார் (பெரியகுளம்), ஆ.மகாராஜன் (ஆண்டிபட்டி), முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தங்கதமிழ்செல்வன், தேனி ஒன்றியக்குழு தலைவர் சக்கரவர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இவ்விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-

இந்திய ஒன்றியத்தில் எந்த மாநிலமும் செயல்படுத்திடாத வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் எனும் மகத்தான திட்டத்தை முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா பிறந்த செப்டம்பர் 15 ஆம் தேதி தொடங்கி வைத்தார்கள். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தின் கீழ், தேனி மாவட்டத்தைச் சேர்ந்த 650 மகளிருக்கு டெபிட் கார்டுகளை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாடு முழுவதும், 1 கோடியே 6 லட்சத்து 58 ஆயிரம் மகளிருக்கு இந்த உரிமைத்தொகை வழங்கப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் இவ்வளவு பெரிய திட்டம் செயல்படுத்தப்பட்டது இதுவே முதல் முறை. தேனியில் மட்டும் 2 லட்சத்து 4 ஆயிரம் பயனாளிகள் உள்ளனர். இதுவரை நமது கழக அரசு நிறைவேற்றிய மகளிர் முன்னேற்றத் திட்டங்களிலேயே முதன்மையானது என்று சொல்லக் கூடிய திட்டம்தான் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம்.

### தமிழ்நாட்டைப் பின்பற்றும் மாநிலங்கள்!

தமிழ்நாட்டை பின்பற்றி, கர்நாடகா, தெலங்கானா போன்ற மாநிலங்களில் மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கப்படும் என வாக்குறுதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. எந்த ஒரு அரசு திட்டத்தை செயல்படுத்தப்படுகிற போதும், மேல்முறையீடு செய்கிற வசதி இருக்காது. ஆனால், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை பொறுத்தவரை, விண்ணப்பம் ஏற்கபடாதவர்கள், மீண்டும் மேல் முறையீடு செய்கிற வசதியைச் செய்துள்ளோம்.

மேலும், உங்கள் மேல்முறையீட்டை பரிசீலிக்க துணை ஆட்சியர் - சார் ஆட்சியர் - வருவாய் கோட்ட அலுவலர்களுக்கு பயிற்சிகளை வழங்கியுள்ளோம். மகளிர் மட்டுமன்றி திருநங்கையர் - மாற்றுத்திறனாளிகளும் இன்றைக்கு இந்த திட்டத்தால் பயன்பெற்று வருகின்றனர்.

பெண்ணுரிமை குறித்து தந்தை பெரியார் கண்ட கனவுகளுக்கு எல்லாம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல் வடிவம் கொடுத்து வருகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் அதை செய்தார்கள், கலைஞர் அவர்களைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்களும், மகளிர் முன்னேற்றத்திற்கான திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

கழக அரசின் திட்டங்கள் எல்லாம் கலாச்சார ரீதியாக முடக்கப்படும் பெண்களை முன்னேற்றுவதற்கான நமது திராவிட மாடல் திட்டங்கள். நமது முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது தான், தந்தை சொத்தில் பெண்களுக்கு சம உரிமை உண்டு என்று 30 வருடங்களுக்கு முன்பே இதற்கான சட்டத்தை நிறைவேற்றினார்கள். இன்றைக்கு எல்லா பெண்களுக்கும் சொத்திலே உரிமைக் கிடைத்திருக்கிறது. இதற்கு காரணம் நமது திமுக அரசு கொண்டு வந்த சட்டம் தான்.

### 17 இலட்சம் மாணவர்கள் பயனடையும் காலை உணவு திட்டம்!

ஒரு பெண் பொருளாதார ரீதியாக முதலில் தன் தந்தை, கணவன், மகன் என ஆண்களையே எதிர்பார்க்க வேண்டும். இந்த நிலைமை மாறி, பெண்கள் ஆண்களுக்கு சமமாக வளர வேண்டுமானால் அவர்களும் தாங்கள் விரும்பும் கல்வியைக் கற்க வேண்டும், தங்கள் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற வேலையிலே அமர வேண்டும். எனவேதான், நம்முடைய திராவிட மாடல் அரசு பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. பள்ளியில் இருந்து கல்லூரிக்குச் செல்லும் பெண்களுக்கு புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் மாதம் 1000 ரூபாய் வழங்குகிறது.

படிப்பதற்காக அல்லது வேலைக்காக பெண்கள் பயணம் செய்வதற்கு வாய்ப்பாக மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பேருந்துப் பயணத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 31 ஆயிரம் பள்ளிகளில் செயல்படுத்தப்படும் காலை சிற்றுண்டித் திட்டம் மிக முக்கியமானது. இத்திட்டத்தில் 17 லட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர்.

> மகளிருக்கு ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். தந்தை பெரியார் சொன்னது தான். மகளிர் நீங்கள் அனைவரும் முற்போக்காகவும் பகுத்தறிவுடனும் சிந்திக்க வேண்டும். சுதந்திரமாக சிந்திக்க வேண்டும். மகளிர் அதிகம் படிக்க வேண்டும்,. ஆண்களை விட பெண்கள் தான் தங்களுடைய வருமானத்தில் பெரும்பகுதியை தங்கள் குடும்பப் பராமரிப்புக்காக செலவிடுகிறார்கள். எனவே, பொருளாதாரத்தில் பெண்கள் வளர்வது நமது வீட்டிற்கும், சமுதாயத்திற்கும், ஒட்டுமொத்த நாட்டிற்கும் மிகப்பெரிய பலனைத் தரும்.

இப்போது, உள்ளாட்சிப் பதவிகளில் 50 சதவீதம் பெண்கள் வந்திருக்கிறார்கள். அதனால் தான் தமிழ்நாட்டில் உள்ள மேயர், நகராட்சி மன்றத் தலைவர், பேரூராட்சித் தலைவர், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர், ஒன்றியக்குழு தலைவர், ஊராட்சி மன்றத் தலைவர் ஆகிய பதவிகளில் 50 சதவீதம் பேர் பெண்களாக உள்ளனர். இந்த சாதனையை நடத்திக் காட்டியது நம் திராவிட மாடல் அரசு. பெண்கள் பொருளாதாரத்தில் தன்னிறைவுப் பெற்றவர்களாக இருப்பது தான் பெண்ணுரிமைக்கான அடித்தளம்.

இந்த நேரத்தில் மகளிருக்கு ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். தந்தை பெரியார் சொன்னது தான். மகளிர் நீங்கள் அனைவரும் முற்போக்காகவும் பகுத்தறிவுடனும் சிந்திக்க வேண்டும். சுதந்திரமாக சிந்திக்க வேண்டும். மகளிர் அதிகம் படிக்க வேண்டும்,. ஆண்களை விட பெண்கள் தான் தங்களுடைய வருமானத்தில் பெரும்பகுதியை தங்கள் குடும்பப் பராமரிப்புக்காக செலவிடுகிறார்கள். எனவே, பொருளாதாரத்தில் பெண்கள் வளர்வது நமது வீட்டிற்கும், சமுதாயத்திற்கும், ஒட்டுமொத்த நாட்டிற்கும் மிகப் பெரிய பலனைத் தரும்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் ஒவ்வொரு வீட்டின் வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் பெரிய தூண்டுகோலாக அமையும். இந்தத் திட்டத்தின் பயனாளிகளாக வந்திருக்கக் கூடிய உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் அன்பையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இவ்விழாவில், வருவாய்த்துறையின் சார்பாக, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ், 650 பயனாளிகளுக்கு ரூ.78.00 இலட்சம் மதிப்பீட்டில் மாதம் ரூ.1000/ பெறுவதற்கான ஆணைகளையும், ரூ.4.60 இலட்சம் மதிப்பீட்டில் 46 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனை பட்டா, மகளிர் திட்டத்தின் சார்பாக 1776 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.16.76 கோடி மதிப்பிலான வங்கி கடனுதவிகளும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 3 நபர்களுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் சார்பில் 4 நபர்களுக்கும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் சார்பில் ஒரு நபருக்கும், கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையினையும், கூட்டுறவுத்துறையின் சார்பில் 200 பயனாளிகளுக்கு ரூ.2.56 கோடி மதிப்பிலான கடனுதவிகளும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் சார்பில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் 8 பயனாளிகளுக்கு ரூ.14.6 இலட்சம் கடனுதவியும்,

ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலம் ஒரு பயனாளிக்கு ரூ.4.00 இலட்சம் மதிப்பிலான பயணியர் ஆட்டோ, மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு ரூ.25.00 இலட்சம் கடனுதவியும், வேளாண்மை பொறியில் துறையின் சார்பில் 1 பயனாளிகளுக்கு டிராக்டர் வாங்க ரூ.4.25 இலட்சம் மானியமும், பவர் டில்லர் வாங்க ரூ.85.000 மானியத்தொகையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் தலா ரூ.6690 மதிப்பிலான தையல் இயந்திரங்கள் என மொத்தம் 8 பயனாளிகளுக்கு ரூ.0.53 இலட்சம் மதிப்பிலும்,

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் விலையில்லா தேய்ப்பு பெட்டி வழங்கும் திட்டத்தின் கீழ் 20 பயனாளிகளுக்கு ரூ.2.04 இலட்சம் மதிப்பிலும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் சிப்பம் கட்டும் அறை மற்றும் மா அடர்வு நடவு திட்டத்திற்கு 3 பயனாளிகளுக்கு ரூ.2.09 இலட்சம் மதிப்பீட்டிலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 11 பயனாளிகளுக்கு காதொலி கருவி உள்ளிட்ட பல்வேறு உபகரணங்கள் ரூ.1.72 இலட்சம் மதிப்பிலும், வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.3000 மதிப்பிலான வேளாண் இடுபொருட்களும், உணவு பொருள் வழங்கல் துறையின் சார்பில் 50 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளும்,

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத்திட்டத்தின் கீழ் தலா ரூ.5 இலட்சம் மதிப்பிலான மருத்துவ காப்பீடு அட்டைகள் என மொத்தம் 20 பயனாளிகளுக்கு ரூ.100 இலட்சம் மதிப்பிலும், சமூகநலத்துறையின் சார்பில் முதலமைச்சர் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.2.15 இலட்சம் மதிப்பிலான முதிர்வு தொகைக்கான வரைவோலையினையும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில் மீன் விற்பனை புதிய கட்டிடம் வழங்குதல் திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு ரூ.10 இலட்சம் மதிப்பிலான விற்பனை அங்காடி என மொத்தம் 2,813 பயனாளிகளுக்கு ரூ.21.83 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

முன்னதாக தேனி மாவட்டம் லோயர் கேம்ப் பகுதியில் அமைந்துள்ள கர்னல் ஜான் பென்னிகுவிக் மணி மண்டபத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வுகளின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ஜெயபாரதி, ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி மதுமதி, வருவாய் கோட்டாட்சியர்கள் பால்பாண்டி (உத்தமபாளையம்), முத்துமாதவன் (பெரியகுளம்), அனைத்து நகர்மன்ற, பேரூராட்சி தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்கள், அனைத்துத் துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேனி மாவட்டம் வீரபாண்டியில் நேற்று முன்தினம் (25.10.2023) நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், பயனாளிகளுக்கு வங்கி கடனுதவியினை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, முன்னிலையில் வழங்கினார். உடன் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மரு.தரேஷ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, சட்டமன்ற உறுப்பினர்கள் நா.இராமகிருஷ்ணன் (கம்பம்), ஆ.மகாராஜன் (ஆண்டிபட்டி), கே.எஸ்.சரவணகுமார் (பெரியகுளம்), முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், நேற்று முன்தினம் (25.10.2023) ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் மகளிர் சிறுதானிய உணவகத்தினை திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, சட்டமன்ற உறுப்பினர்கள் நா.இராமகிருஷ்ணன் (கம்பம்) , ஆ.மகாராஜன் (ஆண்டிபட்டி), கே.எஸ்.சரவணகுமார் (பெரியகுளம்), முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (25.10.2023) தேனி மாவட்டம் லோயர் கேம்ப் பகுதியில் அமைந்துள்ள கர்னல் ஜான் பென்னிகுவிக் மணி மண்டபத்தில் உள்ள திருவுருவ சிலைக்கு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, சட்டமன்ற உறுப்பினர்கள் நா.இராமகிருஷ்ணன் (கம்பம்), ஆ.மகாராஜன் (ஆண்டிபட்டி), கே.எஸ்.சரவணக்குமார் (பெரியகுளம்), முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



தேனி மாவட்ட ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்க சென்ற போது, மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் மகளிர் சுய உதவிக்குழு சகோதரிகள், தங்களின் தயாரிப்பு பொருட்கள் அடங்கிய அரங்கினை அமைத்திருந்தனர். அதனை பார்வையிட்டு, ஒவ்வொரு பொருளின் பயன்பாட்டையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கேட்டறிந்தார்.

# தீபத் திருநகரில் தேசம் காக்கும் திராவிடத் தலைவரின் தீரமிகு முழக்கம்!

**போ**ர்கள் பலகண்டு பொலிகின்ற வரலாற்றின் புன்னகை தேசம் தெய்வத் திருநகரம் திருவண்ணா மலையில், புத்துலகம் படைக்கப் போர் நடத்திக் கொண்டிருக்கும் பொற்காலத் தலைவர் நம் தமிழக முதல்வர் அண்மையில் செய்த கொள்கை முழக்கம் ஆகச் சிறந்த அரசியல் அரங்குகளையும் அசைத்துள்ளது.

மலையே வடிவாக, வானமே மனமாகத் தோன்றி அருணாசலேஸ்வரர் அருள்பாலித்துவரும் தீபத் திருத்தலத்தில், தியாகமே வடிவாகத் திராவிடமே மனமாகத் திகழ்ந்துவரும் நம் திராவிடத் தளபதி தீரமிகு உரையாற்றி உள்ளார். 'உலகமே ஒரு போர்க்களம். அதில் நம் வாழ்க்கை ஒரு போராட்டம். இந்தப் போராட்டத்தில் வெற்றி பெறுவதற்குச் சரியான ஆயுதம், போராட்டத்தில் வெற்றி பெறுவோம் என்ற, நம் திறமையில் நாம்கொண்டிருக்கும் நம்பிக்கைதான்!' என்று மாவீரன் நெப்போலியன் ஒருமுறை சொன்னார்.

அந்த நம்பிக்கையை ஊட்டுவதற்கும், இமயத்தை வெல்லப்போகும் எழுச்சிப் படையின் இனமானப் பேராற்றலை எதிரிகளுக்குக் காட்டுவதற்கும், உலைக்களத்தில் உருவாகித் தயாராய்க் காத்திருக்கும் ஈட்டிமுனை இளைஞர்களின் இதயத்தைத் தீட்டுவதற்கும், ஆண்மைத் திலகமாய் நின்று அவர் ஆற்றியிருக்கும் உரை எட்டுத் திக்கையும் அதிர வைத்திருக்கிறது.

**சிறுத்தையின் பாய்ச்சலா, சிங்கத்தின் கர்ஜனையா, வேங்கையின் சீற்றமா என்று விளங்கிக் கொள்ள முடியாமல் விழி மிரண்டு நிற்கின்றது பகைக்கூட்டம். மேக வானத்தை மின்னலாய்ப் பிளந்து பிரளயமாய் வெடிக்குமே அந்த இடிமுழக்கமா? இல்லை இமய வரம்பினில் மீன்கொடி பொறிக்க எழுந்த பாண்டியரின் படைமுழக்கமா? என்று அரசியல் வித்தகர்கள் அண்ணாந்து பார்க்கிறார்கள் அவரை.**

**'ஒளிமிகுந்த ஊரில் உதய சூரியனின் ஒளியை உங்கள் விழிகளில் பார்க்கிறேன்'என்ற உண்மை வார்த்தைகளை அவர் உதிர்த்த போதும் 'என் சக்தியின் ஊற்றுக்கண் நீங்கள்தான்' என்பதாக அவர் உரைத்தபோதும் ஓங்கி எழுந்த உற்சாகக் கரவொலியில் 'என்னாற்றல் எப்போதும் மின்னாற்றல்' என்பதை நிரூபணம் செய்தமாதிரி நிமிர்ந்து நின்றார் நம் தங்கத் தளபதி.**

'நாற்பதும் நமதே நாளை நமதே' என்ற திருவாசகத்தை மாற்றி, 'நாற்பதும் நமதே நாடும் நமதே' என்னும் திருவாய்மொழியை அவர் உச்சரித்த போது கழகக் கண்மணிகளின் கைகளில் எழுந்தது கனல்! கண்களில் பிறந்ததுபுனல்!

உணர்ச்சி வசப்பட்ட உடன்பிறப்புகள் உள்ளத்தில் அலையடித்தது, ஆனந்தக் கடல்!

இரண்டரை ஆண்டுகளில் கோடிக்கணக்கான குடும்பங்களில் விளக்கேற்றிவைத்து,

ஏழை எளிய தாய்மார்களின் காவல்தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கும் நம் பாசத் தலைவருக்கு மக்கள் நல்வாக்கும் மகளிர் செல்வாக்கும் வளர்பிறை போல வளர்ந்து கொண்டே இருக்கிறது.

### பெருமிதத்தின் உச்சத்தில் தாய்மார்கள்!

அவர் எங்கே சென்றாலும் அங்கிங்கெனாதபடி பெண்களின் திருக்கூட்டம் பெருந்திரளாகத் திரண்டு நின்று அவரை வரவேற்கிறது. முல்லைப்பூ முறுவல் முகமெல்லாம் விரிகிறது.

ஒரு சகோதரனை வரவேற்கும் பரிவும், ஒரு தாயைத் தந்தையைக் காணத் துடிக்கும் பாசமும் அவர்களின் தீரா அன்பில் தெற்றெனத் தெரிகிறது.

அண்ணாமலையார் திருத்தலத்திலும் அன்றைக்கு அப்படித்தான் விண்மீன்கள் எல்லாம் விரைந்து கீழிறங்கிப் பெண்மீன்கள் ஆனதோ என மலைப்புறுமாறு தாய்மார்கள் குழுமி இருந்தார்கள்.




**'என் பிள்ளைக்குக் காலை உணவு!**

**என் பெண்ணின் கல்லூரிப் படிப்புக்கு உதவித் தொகை! எனக்கு மாதம்தோறும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை! காலம் முழுக்கக் கட்டணமில்லாப் பேருந்துச் சேவை! நலிவுற்ற பேருக்கு நகைக் கடன் தள்ளுபடி என்று ஒரு குடும்பத்திற்குத் தேவையான அத்தனை கடமைகளையும் ஓர் ஆட்சித் தலைவனே நிறைவேற்றி வைக்கும் அதிசயம் திராவிடன் மாடல் ஆட்சியில் அன்றி வேறெங்கே நிகழ முடியும்!'** என்று

பேரின்ப வெள்ளத்தில், பெருமிதத்தின் உச்சத்தில் இருக்கும் தாய்மார்கள் கோடிக் கனவுகள் கூடி வந்த மகிழ்வில் தேடிவந்து நின்றார்கள், தெரு வீதி எங்கும்!

காணக் கிடைக்காத கண்கொள்ளாக் காட்சியாய் திருவண்ணாமலையில் ஓர் அரசியல் திருவிழா கோலகாலமாய்த் துவங்கிக் குலுங்க வைத்தது மலைநகரை! பூணக்கிடைக்காத பொன்னாரம் பூண்டதுபோல் மங்கையர்கள் அங்கங்கே மலை மலையாய்க் குவிந்தார்கள்!

வானத்துச் சூரியனாய் வருகிறார் நம் தலைவர் என்று, ஞானப்பூங் கோதையர்கள் சாலையில் பூத்த சோலைகள் போல மலர்ந்து நின்று வரவேற்றார்கள் தலைவரை!

### வந்தார் தலைவர் - வசீகர வைகறை போல்!

வந்தார் தலைவர் வசீகர வைகறை போல்! வாழ்த்து முழக்கம் வானத்தில் மோதித் திரும்பி வந்தது!

மண்பாதை தார்ப்பாதை அனைத்துமே மலர்ப் பாதை ஆகியது! அள்ளித் தெளித்தார்கள் ஆர்வத்தில் பூக்களை, ஆயிரமாயிரம் பேர்! பூக்களை விட மென்மையான நம் தலைவர் தன் பொன்முகத்தில் புன்னகைத் தேர் ஊர்ந்துவர.. அசைந்து வரும் வாகனத்தில் அழகோவியமாய் வந்து கொண்டே இருந்தார்!

முப்பது கிலோமீட்டர் தூரத்தில் இருந்து முதல்வரைத் தொடர்ந்த வாகனப்படை எறும்பூரும் வேகத்தில் நொடிநொடியாய் நகர்ந்து கொண்டிருந்தது. கூப்பிய கரத்தோடு வந்து கொண்டிருந்தார் நம் காப்பியத் தலைவர்! அவரது கண்களில் மழை கலந்த மகிழ்ச்சி மண்டிக் கிடந்தது.

சிறுவர்கள் பெரியவர்கள் கழகக் காளைகள் கட்சி சார்பற்றவர்கள் என்று தேகம் புல்லரிக்கக் கூடியிருந்த கூட்டத்தைக் கடக்க முடியாமல் கடந்து கொண்டிருந்தார் தலைவர். அவர் கண்கள் அத்தனை திசையிலும் பரவிப் பாய்ந்து அனைவரையும் அக்கறையோடு நலம் விசாரித்துக் கொண்டிருந்தது.

அதேபோல 'மகனே நலமா' என்று தாய்மார்களின் விழிகளும் விசாரித்தன நம் தங்கத் தலைவரை!

'அண்ணா நீ வாழ்க' என்று ஆராதித்தனதம்பி தங்கையர்களின் விழிகள்!

'தலைவா..உன் தடங்கண்டுவரும் தொண்டர்களைப் பார்' என்று எகிறிஎகிறிக் குதித்தார்கள் கழகக் கண்மணிகள்!

இது மாமன்னன் இராஜராஜ சோழன் பவனி வந்த தோற்றமா இல்லை, கடல் சென்று வந்த இராஜேந்திர சோழனின் வெற்றித் தேரோட்டமா என்று ஆய்வார் விழிகளை அகலப் படுத்திக் கொண்டே இருந்தது எல்லை காண்பரிய ஊர்வலத்தின் மாட்சி!

வருகின்ற வழியெங்கும் வானம்பாடிகளைப் போலக் கானம்பாடி ஆடினார்கள் கலைக் குழுவினர்!

மங்கல கீதங்கள் பொங்கி வழிந்தன!
தாரை தப்பட்டைகள் ஓங்கி ஒலித்தன!
கூவிக் களித்தார்கள் மக்கள்!
பாடிக் களித்தார்கள் பண்ணிசைப் பாடகர்கள்!

காற்றின் மேனியெங்கும் முத்தமிழ் ஓசையே ஒட்டிக் கொண்டது போல எங்கும் இசை மயம்!

வாயார ஒலித்த வாழ்த்தெல்லாம் கவசமாய் மாறி நம் தளபதியைக் கட்டிக் கொண்டது போன்ற பக்திப் பரவசம்!

எங்கெங்குப் பார்த்தாலும் இன்னிசைக் கோலங்கள்!
சித்தத்தை அதிர்விக்கும் செண்டை மேளங்கள்!
மயிலாட்டம் ஒயிலாட்டம் கரகாட்டம் என்று
காண்பாரைக் குளிர்வித்த கலையாட்டங்கள்!
வானையே பிளக்கும் வாணங்கள்!

அப்பப்பா.. அன்று நாத மழையில் நகரமே அல்லவா நனைந்து போனது!

### திக்குமுக்காடிப்போனது திருவண்ணாமலை!

முதல்வரைக் கண்ட மோகத்தில் மக்கள் முகம் மலர்ந்தது அதிகமா? பாசத்தோடு வந்து குவிந்த மக்களைக் கண்டு முதல்வர் அகம் மலர்ந்தது அதிகமா? என்று ஒரு பட்டிமன்றமே வைக்கலாம்!



டாக்டர் **எஸ். ஜெகத்ரட்சகன்** எம்.பி.,
மேனாள் ஒன்றிய இணையமைச்சர்

அந்த அளவுக்கு திராவிடக் குடும்பத்தின் பாசப் பிணைப்புகளில் திக்குமுக்காடிப் போனது திருவண்ணாமலை! வந்த களைப்போ, இருந்த இளைப்போ, நின்ற வலிப்போ,நேரத்தின் சலிப்போ அணுவளமும் இல்லாமல் 'ஒரு தெய்வீகத் தலைவனைத் தரிசித்து விட்டோம்' என்ற ஆனந்தக் களிப்பே மாதரார் முகமெல்லாம் தாண்டவம் ஆடியது.

அந்தப் பூரிப்பைத்தான் தளபதி தமது பேச்சில் அச்சில் வார்த்த மாதிரி அழகாக வெளிப்படுத்தினார் அன்று! தளபதியின் சொற்கள் ஒவ்வொன்றிலும் சுடர்விட்டது நம்பிக்கை! அவரின் வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் வைரம்போல் மின்னியது வைராக்கியம்! அவரின் வரிகள் அனைத்திலும் வரிப்புலிகளை உருவாக்கும் வலிமை வரிசை கட்டி நின்றது! ஜனநாயகப் போர்க்களத்தில் கச்சை கட்டி நிற்கும் கடைசி வீரனுக்கும் செய்தி சொன்னது அவரது சிந்தனை!

மொத்தத்தில் 'கலைஞரின் குரல்தான் காற்றில் மிதக்கிறதோ' என்னும் கற்பனை லோகத்தில் மயங்கிக் கிடந்தன மக்களின் காதுகள்! தொடங்கிய நேரம் முதல் முடிக்கிற நேரம் வரை, உதிக்கிற சூரியன் உண்டாக்கித் தருகிற உத்வேகத்தை ஒரு நொடியும் தளர்த்தாமல் உணர்ச்சி மழையாகக் கொட்டித் தீர்த்தார் நம் கொள்கைத் தளபதி. என் அறுபதாண்டுக்கால அரசியல் அனுபவம் என்னும் உரைகல்லில் உரைத்துச் சொல்கிறேன் நம் தானைத் தலைவர் தளபதி ஏறா நிலைமிசை ஏறிக் கொண்டிருக்கிறார்! 'இவருக்கு இணைவைக்க எங்கே ஒரு தலைவர்' என்று தேடுபொறி வைத்துத் தேடும்படியாக அரசியல் அற்புதம் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்! 'நம்பிய மக்களின் நாயகன் இவரே' என்று நல்லோர்கள் போற்றி நாமாவளி பாடும் நயத்தக்க தலைவராய் ஒளிர்ந்து கொண்டிருக்கிறார்!

'நான் சுவடுகளையும் மதிப்பேன்; சுவடுகளையும்பதிப்பேன்' என்றுபழைமைக்கும்புதுமைக்கும் பாலமிடுகின்ற சீர்திருத்தச் சிற்பியாகத் திகழ்ந்தோங்கிக் கொண்டிருக்கிறார்.

மேடையில் வீசும் மெல்லிய பூங்காற்றாகவும் வீசத் தெரிகிறது அவருக்கு!

குன்றம் குமுறிய உரையென்று கூறுமே சங்க இலக்கியம், அதுபோலப் பொங்கியெழுந்து பேசவும் தெரிகிறது அவருக்கு! அவர் நாவை அசைத்தாலே நாடி நரம்புகள் ஆடிப் போகிறது எதிரிகளுக்கு!

சொல்லத் தக்கவற்றைச் சொல்வதும், சொன்னவற்றில் வெல்வதும், செல்லப் போவதில் நிதானம் காட்டிச் செல்வதும், வரலாற்று வெற்றிகளை வரவேற்கும் வியூகங்களை வகுத்துக் கொள்வதும்

என்று அவராடும் அரசியல் சதுரங்கம் அனைத்துமே அறிவாலய ஞானிகளின் அச்சு அசலாகவே இருக்கிறது!

### எல்லாச் சொற்களுக்கும் ஒரே பொருள் - எ.வ.வேலு!

**ஆக, ஆடுகளத்தின் நாயகரும் அவரே! பாடுகளத்தின் தலைவரும் அவரே! ஓடுகளத்தில் எப்போதும் ஓடிக்கொண்டே இருக்கிற உடன்பிறப்புகளின் உயிர் மூச்சும் அவரே என்பதை உறுதிப்படுத்தி விட்டது திருவண்ணாமலை பாசறைக் கூட்டம்!**

**'கூட்டத்தைக் கூட்டுவதிலும் தளபதியின் பாராட்டை ஈட்டுவதிலும் என்றும் வல்லவர் எ.வ.வேலு' என்பதும் எழுதப்பட்ட விதியாகி விட்டது. பிரமாண்டம், பேராற்றல், அசுரபலம், அசாத்திய சாதனை, இமாலய முயற்சி, எடுத்த காரியம் யாவினும் வெற்றி என்பன போன்ற எல்லாச் சொற்களுக்குமே ஒரே பொருள் எ.வ.வேலு என்று இயக்க வரலாற்றில் பதிவாகி விட்டது!**

இன்பத் தமிழ்நாட்டைக் காப்பாற்றியது போலவே இந்தியாவைக் காப்பாற்ற வேண்டிய அதிமுக்கியப் பொறுப்பும் நம் தளபதிக்குக் கையளிக்கப்பட்டுள்ள காலகட்டம் இது. அதை முற்ற உணர்ந்து அவர் மொழிந்த வார்த்தைகளின் முற்றிய விளைச்சல்தான்... தீபத் திருநகரில் தேசம் காக்கும் நம் திராவிடத் தலைவரின்தீரமிகு முழக்கம்!

இந்தியாவின் எதிர்காலம் புதிர்காலம் இல்லை கண்டிப்பாய் பொற்காலம்தான் என்பதைப் புரியாதவர்களுக்கும் புரிய வைக்கும் முழக்கம் அது! தீ பரவட்டும் என்ற திராவிடத்தின் மரபுக் குரலை மறுபடியும் மறுபடியும் உரக்க வெளிப்படுத்தும் அவரது உன்னதத்தை உற்றுக் கவனிக்கிறது உலகம். அவருக்கென்றே காத்திருக்கிறது வெகு சீக்கிரம் வெற்றித் திலகம்!

'நம்மால் முடியாதது வேறு யாராலும் முடியாது!' என்று வினையாற்றுவதில் ஒரு வேகப்பந்து வீச்சாளராகவும் வெற்றிகரமான பேச்சாளராகவும் வீறுநடை பயிலும் நம் தளபதியின் முழக்கங்கள் தொடரட்டும்!

**நாளைய இந்தியா நமக்கான இந்தியா என்பதை நாடும் ஏடும் சொல்லட்டும்.**

**நம் தளபதியின் பயணங்கள் வெல்லட்டும்!**




தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (25.10.2023) சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் தமிழ்நாட்டில் தொன்மையான தேவாலயங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தலுக்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், தேவாலய நிர்வாகிகளிடம் முதல் தவணை தொகைக்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வின் போது பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், சிறுபான்மையினர் நல இயக்குநர் திருமதி மு. ஆசியா மரியம், ஆகியோர் கலந்து கொண்டனர்.



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று முன்தினம் (25.10.2023) 234/77 ஆய்வுப் பயணத்திட்டத்தின் கீழ் ஒரே நாளில் தேனி மாவட்டத்தின் 4 சட்டமன்றத் தொகுதிகளிலும் ஆய்வு மேற்கொண்டார். அதை தொடர்ந்து மதுரை மாவட்டத்தில் திருமங்கலம், உசிலம்பட்டி மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் விருதுநகர், சாத்தூர் சட்டமன்றத் தொகுதிகளிலும், தூத்துக்குடியில் கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதியிலும் தொடர் ஆய்வு மேற்கொண்டார். அன்று ஒரு நாளில் மட்டும் 9 சட்டமன்றத் தொகுதிகளில் அமைச்சர் நேரடி ஆய்வுகளை மேற்கொண்டு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடினார். பள்ளிகள், நூலகம், மாவட்ட கல்வி அலுவலகம், வட்டாரக் கல்வி அலுவலகம் என பயணித்து பணியாளர்கள் மற்றும் பயனாளர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்து விரைவில் அதன் மீது தீர்வு காணப்படும் என உறுதியளித்தார்.



நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி, மாணவர் அணி, பொறியாளர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி ஆகியவை இணைந்து நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் நாமக்கல் தெற்கு நகரச் செயலாளர் ராணா ஆனந்த், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் பொன்.சித்தார்த், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் ப.கிருபாகரன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சத்தியசீலன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. விவசாய அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

# (நான்காவது பட்டியல்)

### விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. விவசாய அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**காஞ்சிபுரம் மாநகரம்**

தலைவர் - ப.அண்ணாமலை, நெ.47, சர்வதீர்த்தம் தென்கரை பெரிய காஞ்சிபுரம்

துணைத் தலைவர் - ந.மோகன், மேல் தெரு, தேனாம்பாக்கம் காலணி, காஞ்சிபுரம்

அமைப்பாளர் - **த.முருகானந்தன்,** செவிலிமேடு, காஞ்சிபுரம்

துணை அமைப்பாளர்கள் - த.தயாளன், நெ.14/16, வீராகாளியம்மன் கோயில் ஒத்தவாடைத் தெரு பிள்ளையார் பாளையம், காஞ்சிபுரம். ம.சண்முகம், முதல் குறுக்குத் தெரு, அன்னை சத்யா நகர், ஓரிக்கை, காஞ்சிபுரம்.

டி.எம்.சோமசுந்தரம், நெ.131, அருப்பெருஞ்செல்வி தெரு, பெரிய காஞ்சிபுரம். நா.அருணாச்சலம், ரங்ககிருஷ்ணா நகர், சின்ன காஞ்சிபுரம் மு.இளங்கோவன், நெ.6/29, நைனார் தெரு, சின்ன காஞ்சிபுரம்

**நீலகிரி மாவட்டம்**

தலைவர் - ஆ.கர்ணன், 89/4, கோட்டட்டி, சோலூர், நீலகிரி.

துணைத் தலைவர் – எஸ்.மாரப்பன், மாதம்மாள் தோட்டம், குளிச்சோலை நீலகிரி.

அமைப்பாளர் - **எச்.செல்வராஜ்,** தும்மனட்டி, உதகை நீலகிரி.

துணை அமைப்பாளர்கள் - ம.லி.மூர்த்தி, மல்லிகொரை, உதகை நீலகிரி, கே.எஸ்.ஜார்ஜ், கையுன்னி நீலகிரி, எம். ராஜேந்திரன், குறிஞ்சி நகர், கொளப்பள்ளி நீலகிரி. பி.மகேஷ், 1/137, கெந்தொரை, உதகை நீலகிரி. டி.என்.கணபதி, தாவணெ (அ), உதகை. நீலகிரி. காளி, கூக்கல் (அ), உதகை நீலகிரி, சுரேஷ் (எ) மாவண்ண துரை, 5/19 எ5, மரப்பாலம், புளியம்பாளை அஞ்சல், கூடலூர், நீலகிரி -643212.

**சிவகாசி மாநகரம்**

தலைவர் - உ.சிவகணேசன், 79எ, நாடார் தெரு, திருத்தங்கல்.

துணைத் தலைவர் - காளிராஜன், 7, கனிநாடார் தெரு, சிவகாசி.

அமைப்பாளர் - **சிவராஜ்,** 1383பி, சகுந்தலா இல்லம், சோலைகாலனி, சிவகாசி.

துணை அமைப்பாளர்கள் - சுரேஷ் அதிவேக், 663எப், புஷ்பா காலனி, சிவகாசி செல்வகணேஷ், 286எ, சுப்பிரமணியபுரம் காலனி 2வது தெரு, சிவகாசி ராஸ்டிரபதி (எ) மிக்கேல், 1082, பள்ளப்பட்டி ரோடு, திருத்தங்கல் சக்கு மணிகண்டன், 186பி, அம்மன்கோவில்பட்டி தென்பாகம், சிவகாசி.

**புதுச்சேரி மாநிலம்**

தலைவர் – ஆ.பாஸ்கர் (எ) ஆனந்தன், கிழக்கு வீதி, பாகூர். புதுச்சேரி-607402

துணைத் தலைவர் - க.செல்வராசு, மாரியம்மன் கோவில் வீதி, அரும்பார்த்தபுரம், புதுச்சேரி-605010

அமைப்பாளர் - **வெ.குலசேகரன்,** 55, மெயின் ரோடு, ஒதியம்பட்டு அஞ்சல், வில்லியனூர், புதுச்சேரி-605110

துணை அமைப்பாளர்கள் - ப. சுந்தரமூர்த்தி, 286, புவன்கரே வீதி, உழந்தைகீரப்பாளையம், புதுச்சேரி-4 ஏ. காசிநாதன், 6, திருமலை வீதி, சிவகணபதி நகர், பைபாஸ் மேற்கு, வில்லியனூர், புதுச்சேரி-605110 மு.சுப்ரமணி, 45, அரசமரத்து வீதி, வம்புப்பட்டு, செல்லிப்பட்டு, புதுச்சேரி-605501 ஆ.பாண்டியன், 22, புதுத் தெரு, ஏம்பலம், புதுச்சேரி-605106 மா. ஜெயசீலன், 8, முதல் குறுக்குத் தெரு, சக்தி நகர், மேரி உழவர்கரை, புதுச்சேரி-10. ப.நாராயணசாமி, 4,9-வது குறுக்குத் தெரு, வெண்ணிசாமி நகர், ஜி.என்.பாளையம், புதுச்சேரி-605110 தே.பெருமாள், 36, தேச மாரியம்மன் கோவில் தெரு, ஏம்பலம், புதுச்சேரி-605106 மா.ராமானுஜம், 3-ஏ, பிள்ளையார் கோவில் தெரு, கூனிச்சம்பட்டு, கோனேரி, புதுச்சேரி-605501 து. ஹரிதேவன் (எ) சுகுமார், 14, 6-வது குறுக்குத் தெரு, பொன் நகர், ரெட்டியார்பாளையம், புதுச்சேரி-605010 வெ.அருள், 47, மாரியம்மன் கோவில் தெரு, வம்புப்பட்டு, புதுச்சேரி-605107 செ. சுரேஷ்குமார், 36, வி.க. தெரு, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், கதிர்காமம், புதுச்சேரி - 605009.

**புதுச்சேரி - காரைக்கால் மாநிலம்**

தலைவர் - ரா.வெங்கடாசலபதி, எண்.1, வடக்கு வீதி, கோவில்மேடு. திருவேட்டக்குடி.

துணைத் தலைவர் - அமிதாப் வீ.வேலுமணி, 59(1) வேட்டைக்காரன் தெரு, தலத்தெரு அஞ்சல் காரைக்கால்.

அமைப்பாளர் - **த.பிரபு (எ) பிரித்திவ்ராஜ்,** எண்.21/2, கொன்னகாவளி வரிச்சிக்குடி

துணை அமைப்பாளர்கள் - துரை கண்ணபிரான் எண்.11/3, திருநள்ளார் ரோடு காரைக்கால். ரா.மாறன், எண்.225, கவரதெரு, அக்கரைவட்டம் நிரவி - அஞ்சல். எஸ். பி. சண்முகம், எண்.20, மன்னார் நாயக்கன் வீதி. கோட்டுச்சேரி அஞ்சல், காரைக்கால், சு.கோவிந்தராசு, எண்.52, மாரியம்மன் கோவில் கீழவீதி திருவேட்டக்குடி அஞ்சல். ஜெ.ஜெஸ்டீன்ராஜ், எண்.8, சவுரியார் கோவில் தெரு, நல்லாத்தூர், நெடுங்காடு.

**கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் - எஸ்.நாராயணன், சின்னமுத்தூர் (அ) பச்சைகொட்டாய் சுண்டேகுப்பம் அஞ்சல் கிருஷ்ணகிரி. எம்.ரமேஷ், கெங்கவரம், எம்.ஜி.அள்ளி, போச்சம்பள்ளி தாலுகா கிருஷ்ணகிரி. எ.வெங்கடாஜலபதி, தட்ரஹள்ளி கிராமம் (ம) அஞ்சல், கிருஷ்ணகிரி, எம்.மாணிக்கம், அம்மன்நகர். கிருஷ்ணகிரி. கல்கண்டு.ஜி.பூபதி, மாடரஹள்ளி, பருகூர் வட்டம், கிருஷ்ணகிரி, தி.ராமச்சந்திரன், சின்னக்கவுண்டர் கொட்டாய், கனகமுட்லு, கிட்டம்பட்டி, கிருஷ்ணகிரி.

**நாகப்பட்டினம் மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - மா.செந்தில், கடை த்தெரு, திருக்குவளை திருக்குவளை (வட்டம்) நாகப்பட்டினம் மாவட்டம் 610204. மா. பாலு (எ) பாலசுப்பிரமணியன், 5/50, கொட்டவெளிகாடு, மருதூர் தெற்கு அஞ்சல், வேதாரண்யம் தாலுகா, நாகப்பட்டினம் மாவட்டம் 614714. கோ. தனபால், 3/108, தெற்கு காடு, தாணிக்கோட்டகம் அஞ்சல், வேதாரண்யம் தாலுகா, நாகப்பட்டினம் மாவட்டம் - 614716.

**மதுரை மாநகரம்**

துணை அமைப்பாளர் – மு.ரவிக்குமார், 25. கணபதி நகர், அந்தநேரி, காதைக்கிணறு கடச்சனேந்தல் அஞ்சல், மதுரை 104.

**சிவகங்கை மாவட்டம்**

துணை அமைப்பாளர் - பா.காளிமுத்து, சிறுபாலை, கோட்டையூர் அஞ்சல், இளையான்குடி தாலுகா, சிவகங்கை மாவட்டம் - 630 702.

**விழுப்புரம் வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் - சி.தனசேகர், 1/23, தோப்புத்தெரு, சேந்தமங்கலம் கிராமம், ஆவணிப்பூர் அஞ்சல், திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்

**கோவை வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் – சு.ராஜகோபால், 9/51 பிள்ளையார் கோவில் வீதி கைக்கோளபாளையம், கோவை - 641062.

**இராணிப்பேட்டை மாவட்டம்**

துணை அமைப்பாளர் - ஆ.ராமன், நெ.102/1 பிராமணர் தெரு, வெங்குப்பட்டு கிராமம் பின் - 631102 சோளிங்கர் தாலுகலா,

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் – ந.மகாலிங்கம், 1 ஜி தென்றல் நகர், திருநெல்வேலி. எம்.கணபதி, 191, தெற்கு அம்மன் கோவில் தெரு, பழவூர், திருநெல்வேலி. எஸ். மலைப்பாண்டியன், 17-5 பெருமாள் தெற்கு ரத வீதி, திருநெல்வேலி.

**தேனி தெற்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - வீ.தமிழ்மாறன், 52/எச்2/1, எஸ்.வி.பள்ளி பின்புறம், உத்தமபுரம், கம்பம், வே.தாஸ், தெற்கு சிலுவை குறுசு தெரு, உத்தமபாளையம், தேனி மாவட்டம் ஆ.மகேந்திரன், வார்டு - 2, சீப்பாலக்கோட்டை ரோடு, சின்னமனூர், தேனி மாவட்டம்

**மயிலாடுதுறை மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் – க.பிரேம்குமார், மெயின்ரோடு, மூவலூர் அஞ்சல், மயிலாடுதுறை தாலுகா, மயிலாடுதுறை மாவட்டம் கே.எம்.வி. செந்தில்குமார் உடையார் தெரு, அகரசீரங்குடி எலந்தங்குடி அஞ்சல், மயிலாடுதுறை தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம். ஆர்.செம்பரிதி, 1/19, வடக்கு தெரு, கீழப்பாதி, மேலப்பாதி அஞ்சல், நடுக்கரை ஊராட்சி, தரங்கம்பாடி வட்டம்

**தென்காசி தெற்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - கோ. சுடலைமுத்து, 5/63 யாதவர் தெரு, சாம்பவர் வடகரை. சு.ஜெயபாலன், 13/569, பிராதான சாலை, ஆலங்குளம், வை. சுப்பிரமணியன், 7-வது வார்டு, பிள்ளளையார்கோவில் தெரு, கிளங்காடு, செங்கோட்டை ஒன்றியம்

**புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் – மா. செல்லத்துரை, நரியப்பட்டி, வெம்மணி, புதுக்கோட்டை. மணியார் ரெங்கராஜ், கந்தர்வக்கோட்டை, புதுக்கோட்டை. பழனியப்பன், புதுவிடுதி, கறம்பக்குடி, ரெகுநாதபுரம், புதுக்கோட்டை. நாகராஜன், ஆதனப்பட்டி, புதுக்கோட்டை. வீ.முத்தையா, ஆரியூர், மதிய நல்லூர் அஞ்சல், இலுப்பூர் தாலுகா, புதுக்கோட்டை. க. சாமியய்யா, பெருங்களூர், புதுக்கோட்டை. எ.செல்வம், கல்குளத்தான்பட்டி, ராஜகிரி, புதுக்கோட்டை.

**ஈரோடு வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - ரா.பழனிச்சாமி, எண். 78, பள்ளிக்கூடம் தெரு, கடத்தூர் அஞ்சல், நம்பியூர் தாலுகா - 638 454, டி.சி.மணி, கமலா ரைஸ் மிலி வீதி-2, புதுப்பாளையம் அஞ்சல், கோபி வட்டம் - 638 476.

**திருப்பூர் வடக்கு மாவட்டம்**

திருப்பூர் வடக்கு மாவட்ட விவசாய அணியின் அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட பா. நந்தகுமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **மு. ரத்தினசாமி,** (51, ஜீவா வீதி, அனுப்பர்பாளையம், திருப்பூர் - 641652) அவர்களை திருப்பூர் வடக்கு மாவட்ட விவசாய அணியின் அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திருப்பூர் வடக்கு மாவட்ட விவசாய அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்**

திருநெல்வேலி கிழக்கு மாவட்ட விவசாய அணியின் துணை அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட சு.அருணாச்சலம் (எ) மைனர் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **லெ. ஆதிநாராயணன்,** (தேவர் கிழக்கு தெரு, வள்ளியூர், திருநெல்வேலி) அவர்களை திருநெல்வேலி கிழக்கு மாவட்ட விவசாய அணியின் துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 25-10-2023

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி

## தி.மு.க. தொண்டர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

# (ஐந்தாவது பட்டியல்)

### தொண்டர் அணிச் செயலாளர் பெ.சேகர் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொண்டர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சென்னை வடக்கு மாவட்டம்**

தலைவர் - ஆர். மூர்த்தி, 122, தேசிய நகர், 2வது தெரு, புதுவண்ணாரப்பேட்டை, சென்னை - 81.

துணை தலைவர் – இரா.மகேந்திரன் (எ) கமல், 170, 4வது தெரு, புதுமனை குப்பம், காசிமேடு, சென்னை - 600013.

அமைப்பாளர் - **கே.கலையரசன்,** 108, 2வது தெரு, இந்திராகாந்தி நகர், வியாசர்பாடி, சென்னை - 39.

துணை அமைப்பாளர்கள் - ஜெயக்குமார், 72, போஸ் தெரு, கண்ணதாசன் நகர், சென்னை - 118. எஸ்.குமார், 204, சஞ்சீவிராயன்கோயில் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை - 21. எ.சாகுல் ஹமீது, 23/15, அமலகார் தெரு, கென்னடி நகர், எருகச்சேரி, சென்னை - 118. வி.மூர்த்தி, 48/22, கே.வி.கே.சாமி தெரு, அண்ணா நகர், கொருக்குபேட்டை, சென்னை - 21. சரவணமூர்த்தி, 1, போஜராஜ நகர் 1வது தெரு, பழையவண்ணாரப்பேட்டை, சென்னை - 21. விஜய், 661, 8வது தெரு, எஸ்.எ. காலனி, வியாசர் பாடி, சென்னை - 39. வி.அமுல்ராஜ், 12/13, கருணாநிதி தெரு, கொடுங்கையூர், சென்னை - 118. எஸ். பாஸ்கர், 2எ, 2வது தெரு, பாரதி நகர், கொருக்குபேட்டை, சென்னை - 21. இரா.முருகேசபாண்டியன், எண். 159/65, ரங்கமாள் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை - 21.

**சென்னை வடகிழக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - எம்.சி.வெங்கடேசன், எண். 28, மா.பொ.சி. தெரு, பெரியதோப்பு, மணலி, சென்னை - 68. த.எழிலன், எண்.65, தேவராஜன் தெரு, சின்னசேக்காடு, மணலி, சென்னை - 68.

**நீலகிரி மாவட்டம்**

தலைவர் - உ.ஞானசேகரன், கோட்டவயல், தேவாலா, நீலகிரி.

துணை தலைவர் - எஸ்.ரமேஷ்குமார், குன்னூர் டீ எஸ்டேட், குன்னூர், நீலகிரி.

அமைப்பாளர் - **அ.சுரேஷ்,** 3/527, அம்மன் நகர், எஸ். கைகாட்டி, நீலகிரி.

துணை அமைப்பாளர்கள் - கே.ராமகிருஷ்ணன், கெரடாலீஸ், தூதூர்மட்டம், நீலகிரி. எம்.கணேஷ், 5/91, தூனேரி, உதகை, நீலகிரி. சி.பாபு, எடல்ஜி தெரு, உதகை, நீலகிரி. கோ.தங்கவேல், கல்பனா காட்டேஜ், கோத்தகிரி. கே.ஹரி, 111, விநாயகர் தெரு, குன்னூர், நீலகிரி. செல்வராஜ், சர்சில், உதகை, நீலகிரி.

**கரூர் மாவட்டம்**

தலைவர் - அ.சரவணன், 127டி, முதல் கிழக்கு தெரு, திருமாநிலையூர் அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் - 639003.

துணை தலைவர் - எம்.ராஜா, 38, அம்மன் நகர் 3வது கிராஸ், விவிஜி நகர், வெங்கமேடு அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் - 639006.

அமைப்பாளர் - **எம்.சிவகுமார் (எ) ஜிம் சிவா,** 19, காந்தி நகர் 2வது கிராஸ், கரூர் அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் - 639001.

துணை அமைப்பாளர்கள் - ந. மணிகண்டன், 7/160, என்.ஜி.ஜி.ஓ காலனி, காவேரி நகர், குளித்தலை அஞ்சல், குளித்தலை தாலுகா, கரூர் மாவட்டம் - 639104. வி.சாக்ரடீஸ், 43, ரெங்கநாதபுரம், கட்டளை அஞ்சல், கிருஷ்ணராயபுரம் தாலுகா, கரூர் மாவட்டம் - 639108. சி.கென்னடி, 118, ஈ. வே.ரா. தெரு, வாங்கல், வாங்கல் அஞ்சல், மண்மங்கலம் தாலுகா, கரூர் மாவட்டம் - 639116. ஆவின் ம.சக்தி, 65, வடக்கு தெரு, பசுபதிபாளையம், பசுபதிபாளையம் அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் - 639004. பி.அருணகிரி, 83ஏ, ஆதிதிராவிடர் தெரு, புஞ்சை தோட்டக்குறிச்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி அஞ்சல், புகழூர் தாலுகா, கரூர் மாவட்டம் - 639113. என்.தர்மலிங்கம், 42ஏ, திருக்காம்புலியூர், எல்.என். எஸ். அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் - 639002. எஸ்எம்.பிரதீப், 3/49, பிள்ளாபாளையம், லாலாபேட்டை அஞ்சல், கிருஷ்ணராயபுரம் தாலுகா, கரூர் மாவட்டம் - 639105.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - எ. ஜலீஸ் ரஹ்மான், 13எ/1எ, முகம்மது அலி தெரு, திருநெல்வேலி டவுண். சீ.பெருமாள் சாமி, 568, சுப்புராஜ் மில் காலனி, சங்கம் நகர், திருநெல்வேலி. எஸ்.ஏ. சேக் (எ) சேக் உஸ்மானி, 47, ஞானியார் அப்பா நகர் 1வது தெரு, மேலப்பாளையம், திருநெல்வேலி.

**சென்னை தென்மேற்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - எஸ். லோகராஜ், பி-68, பி. எம். தர்க்கா, அவ்வை சண்முகம் சாலை, சென்னை - 600005. பி.வெங்கடேசன், எண். 149/17, சீனிவாசபுரம், பட்டினபாக்கம், சென்னை - 28. கே.ஜோதி, எண். 27/1, பெரியார் சாலை, வன்னிய தேனாம்பேட்டை, சென்னை - 18.

**தேனி தெற்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - எ.கதிரேசன், வார்டு-6/13, பெருமாள்பட்டி தேவாரம் அஞ்சல், தேனி மாவட்டம். அ.ஷேக் கமரூதீன், 9/4/32, அப்பாச்சி பிள்ளை சந்து, உத்தபாளையம், தேனி மாவட்டம். ப.ஜெகன்பிரதாப், வார்டு - 14, ஏ.எம். சர்ச் தெரு, கம்பம், தேனி மாவட்டம்.

**புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - எம்.முருகேசன், பழைய கந்தர்வக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம். கே.ஆர். பழனிச்சாமி, தெத்துவாசல்பட்டி, புதுக்கோட்டை மாவட்டம். அன்பு லாசர், புதுக்கோட்டை.

**தஞ்சை மாநகரம்**

அமைப்பாளர் - **சூ.எப்சிராஜ்,** 33/943, மிஷன் 3ஆம் தெரு, மானம்புச்சாவடி, தஞ்சாவூர்.

துணை அமைப்பாளர்கள் - சி.சுரேஷ், 2015/11, அழகப்பிள்ளை சந்து, சோர்வைக்காரன் தெரு, தஞ்சாவூர். ரா.ராஜ்குமார், 288, வடக்கு ஆஜாரம், தஞ்சாவூர். வி. செந்தில்குமார், 12, டி.பி.எஸ்.நகர், எம்.சி.சாலை, தஞ்சாவூர். ஏ.லியோ, 97/62, கல்லுக்கட்டித் தெரு, வடக்குவாசல், தஞ்சாவூர். எஸ்.ரவிச்சந்திரன், 16, அண்ணா நகர், 16 தெரு, விளார் சாலை, தஞ்சாவூர்.

**தூத்துக்குடி மாநகரம்**

துணை அமைப்பாளர் – த.முத்துதுரை, 39இ, வண்ணார் 3வது தெரு, மேல சண்முகபுரம், தூத்துக்குடி - 3.

**கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம்**

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட தொண்டர் அணி தலைவராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட **கா. சுரேஷ்** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, **அவரை மாவட்ட அமைப்பாளராகவும்,** கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட தொண்டர் அணி அmமைப்பாளராகவும் ஏற்கனவே நியமிக்கப்பட்ட **தினேஷ்குமார்** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, **அவரை மாவட்ட துணைத் தலைவராகவும்,** கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட **சி. மூர்த்தி** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, **அவரை மாவட்ட தலைவராகவும் நியமிக்கப்படுகிறார்கள்,** ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட தொண்டர் அணி நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தஞ்சை தெற்கு மாவட்டம்**

தஞ்சை தெற்கு மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஆர். நாராயணன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **டி. மணிகண்டன்,** (கொன்றைக்காடு அஞ்சல், பேராவூரணி வட்டம் தஞ்சை.) அவர்கள் தஞ்சை தெற்கு மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தஞ்சை தெற்கு மாவட்ட தொண்டர் அணி நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்**

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட வி.சி.என். மகேந்திரன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **எம். வேலுமணி,** (மேச்சேரி, கிருஷ்ணகிரி நகரம், கிருஷ்ணகிரி மாவட்டம்) அவர்கள் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார். மேலும் கூடுதலாக கீழ்கண்டவர்கள் துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

துணை அமைப்பாளர்கள் – சி. ராஜேஸ்குமார், காந்தி நகர், திம்மாபுரம் காவேரிபட்டிணம், கிருஷ்ணகிரி. வெல்டிங் சி. குமார், திப்பம்பட்டி, ரெட்டிப்பட்டி ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி. ஜ. அண்ணாதுரை, கொங்கன்செரு, பட்லப்பள்ளி, பர்கூர் தாலுகா, கிருஷ்ணகிரி. கே. சங்கர், பாப்பாரப்பட்டி காவேரிபட்டிணம், கிருஷ்ணகிரி. அ. செந்தில், பலனம்பாடி பாரூர், போச்சம்பள்ளி, கிருஷ்ணகிரி.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தொண்டர் அணி நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 25-10-2023

**மாஸ்டர் பெ.சேகர்**
செயலாளர்
தி.மு.க. தொண்டர் அணி

## தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள்கள் நியமனம்!

# நான்காவது பட்டியல்!

### விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா அறிவிப்பு!

**கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.**

**கரூர் மாவட்டம்**

**தலைவர்** : பி.எஸ். பிரதாபன் 20 திருவள்ளுவர் நகர் 2 வது தெரு,வேலாயுதம்பாளையம் அஞ்சல் புகழூர் தாலுகா கரூர் மாவட்டம் 639117

**துணை தலைவர்**: பி. பழனிச்சாமி 107 கோடாங்கிப்பட்டி தாந்தோனி மலை அஞ்சல் கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் 639005

**அமைப்பாளர்** : தென்னிலை பெ. பாலு 69 சோளி யம்மன் தெரு கே.வி.பி. நகர் அருகில், பெரியார் நகர், கரூர் அஞ்சல் கரூர் தாலுகா கரூர் மாவட்டம் 639002

**துணை அமைப்பாளர்கள்** :டி.என். சுப்பிரமணியன் 52 ஆதிராவிடர் தெரு, புஞ்சை தோட்டக்குறிச்சி அஞ்சல் புகழூர் தாலுகா கரூர் மாவட்டம் 639113 கே. பரமசிவம் 81/40 மேல அக்ரஹாரம் கிருஷ்ணராயபுரம் அஞ்சல் கிருஷ்ணராயபுரம் தாலுகா கரூர் மாவட்டம் 639102 தங்க ஆறுமுகம் 4 தில்லை நகர் வெங்கமேடு அஞ்சல் கரூர் தாலுகா கரூர் மாவட்டம் 639006 சி. சிவக்குமார் 5/66 செவ்வந்திப்பாளையம் நன்னியூர் அஞ்சல் மண்மங்கலம் தாலுகா கரூர் மாவட்டம் 639113 என். ராமசாமி ஈசநத்தம், ஈசநத்தம் அஞ்சல் அரவக்குறிச்சி தாலுகா கரூர் மாவட்டம் 639115

**தேனி தெற்கு மாவட்டம்**

**துணை அமைப்பாளர்கள்** :க. பவுன்ராஜ், மூலக்கடை, கடமலை ஒன்றியம், ஆண்டிப்பட்டி தாலுகா, தேனி மாவட்டம். ந. முத்துச்சாமி வார்டு - 1, புதூர் உத்தமபாளையம், தேனி மாவட்டம். ம. முருகேசன் முத்துலாபுரம், உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம்.

**மதுரை தெற்கு மாவட்டம்**

**துணை அமைப்பாளர்** : எம்.வி .மாயக்கண்ணன் 1/177எ கலைஞர் நகர் தனக்கன் குளம் 5வது தெரு திருப்பரங்கு ன்றம் ஒன்றியம் மதுரை தெற்கு மாவட்டம்.625006.

**கடலூர் மேற்கு மாவட்டம்**

**துணை அமைப்பாளர்கள்:** எஸ். செந்தில் கிழக்குத் தெரு , இருளக்குப்பம், எ ஆண்டிகுப்பம், பண்ருட்டி தாலுகா, கடலூர் மாவட்டம். வி.ஏழுமலை முத்தையா நகர் தட்டாஞ்சாவடி பண்ருட்டி வட்டம் , கடலூர் மாவட்டம்

**மயிலாடுதுறை மாவட்டம்**

**துணை அமைப்பாளர்:** ஆர்.செம்பரிதி 11/9வடக்கு தெரு, கீழப்பாதி மேலப்பாதி அஞ்சல் தரங்கம்பாடி தாலுகா மயிலாடுதுறை மாவட்டம்

**தாம்பரம் மாநகரம்**

தலைவர் : ப. பிரதாப் எண். 2, திருக்குறள் தெரு, எஸ்.பி.ஐ. காலனி, சிட்லபாக்கம், சென்னை 600064.

துணைத் தலைவர்: பி. ஆனந்தராஜ் எண். 3, டி.சு. லட்சுமண நகர், திருநீர்மலை ரோடு, சென்னை 600044.

அமைப்பாளர் : டைகர். சிவா எண். 9, பிள்ளையார் கோயில் 2வது தெரு, இலட்சுமிபுரம், குரோம்பேட்டை, சென்னை 600044.

**துணை அமைப்பாளர்கள்** கஜபதி எண். 11ஏ பிரசாந்த் காலனி, முதல் பிரதான சாலை, செம்பாக்கம், சென்னை. ஏ. தமிழ்பாண்டியன் எண். 36, பஜனை கோயில் தெரு, பாரதி நகர் சேலையூர், சென்னை - 600073, சி. நித்யானந்தம் எண். 2, தாய் மூகாம்பிகை நகர், 2வது தெரு, அனகாபுத்தூர், சென்னை - 600070. எஸ். கணேசன் எண். 158, குறிஞ்சி மலர் தெரு, சமத்துவ பெரியார் நகர், பழைய பெருங்களத்தூர், சென்னை - 600063. குட்டி (எ) ராஜி எண். 9/5, அந்தோணி பிள்ளை தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை - 600059. இரா. சாரங்கபாணி எண். 2/3, சின்ன தெரு (எ) ஜமீன் இராயப்பேட்டை, குரோம்பேட்டை, சென்னை - 600044

**கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்**

**துணை அமைப்பாளர்கள்** : மகேந்திரன் ஒட்ட தெரு, பாரண்டப்பள்ளி, மத்தூர், கிருஷ்ணகிரி. வி. பால்மூர்த்தி கவுண்டனூர் மத்தூர், கிருஷ்ணகிரி. ப. ராஜா பண்டசீமனூர் பர்கூர், கிருஷ்ணகிரி. வி. முனியப்பன் எண்ணெகோள்பதூர், கிருஷ்ணகிரி. டி. சிற்றரசு இடைப்பையூர், கிருஷ்ணகிரி.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள்: 25.10.2023

**அன்னியூர் சிவா**
செயலாளர்
தி.மு.க. விவசாய தொழிலாளர் அணி





தமிழ்நாடு முழுவதும் மாவட்டங்கள் தோறும் கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்கு, பொற்கிழி வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, தேனி தெற்கு மற்றும் வடக்கு மாவட்டக் கழகத்தைச் சேர்ந்த 1000 மூத்த முன்னோடிகளுக்கு தலா ரூ.10,000 பொற்கிழியை கம்பத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். இதில் அமைச்சர் ஐ.பெரியசாமி, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எல்.மூக்கையா, தேர்தல் பணி செயலாளர் கம்பம் பெ.செல்வேந்திரன், மாவட்டச் செயலாளர்கள் கம்பம் என்.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தங்க தமிழ்ச்செல்வன், முன்னாள் மாவட்டப் பொறுப்பாளர் ஜெயக்குமார் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.மகாராஜன், கே.எஸ்.சரவணக்குமார் மற்றும் பலர் உள்ளனர்.






D.நாகனி R.ரவி இல்ல
திருமண விழா

கழக தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
மு.க. ஸ்டாலின் அவர்கள்

கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்



மணமக்கள்
B.பிரியதர்ஷினி MBA.,
CM.விஜய் B.Com(CA)., LLM.,

இவர்களின் நல்லாசியுடன் திருமண விழாவிற்கு வாழ்த்த வருகை தரும்
மாண்புமிகு. கே.ஆர்.பெரியகருப்பன் B.Com., BL.,
தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சர், சிவகங்கை மாவட்ட கழக செயலாளர்

நாள் :
27.10.2023
வெள்ளிக்கிழமை
இடம் :
ஸ்ரீ தாய் மஹால்,
இராம்நகர்,
தேவகோட்டை.

மாண்புமிகு. எஸ்.ரகுபதி B.Sc., BL., அவர்கள்
சட்டத்துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் புதுக்கோட்டை தெற்கு

மாண்புமிகு. பி.கே.சேகர் பாபு அவர்கள்
இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் சென்னை கிழக்கு

மாண்புமிகு. தங்கம் தென்னரசு B.E., அவர்கள்
நிதித்துறை, தமிழ் வளர்ச்சித்துறை, மின்சார துறை அமைச்சர்,மாவட்ட கழக செயலாளர், விருதுநகர் வடக்கு

மாண்புமிகு. முகவை மு.தென்னவன் M.A.,
முன்னாள் அமைச்சர், மாநில இலக்கிய அணித் தலைவர்

மாண்புமிகு. காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் B.A., MLA., அவர்கள்
சட்டமன்ற உறுப்பினர், இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர்

மாண்புமிகு. தமிழரசி ரவிக்குமார் MLA.,
முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்

அன்புடன் அழைக்கும் ... R.ரவி ஒன்றிய கழக செயலாளர், ஒன்றிய கவுன்சிலர் தேவகோட்டை தெற்கு

தேவகோட்டை தெற்கு ஒன்றிய தி.மு.க - சிவகங்கை மாவட்டம்


# திராவிட சினிமா 29

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

# பகுத்தறிவு பாடலாசிரியர்கள்!

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

தஞ்சை ராமையாதாஸ்



கவிஞர் மாயவநாதன்



உடுமலை நாராயணக் கவி



திராவிட சினிமாவின் பாடல்களில் பெரும் பான்மையானவை திரைக்கதைகளின், காட்சிகளின் தொடர்ச்சியாகவே இருப்பதைக் காண முடியும். காட்சியமைப்பிலேயே கதைமாந்தர் தனித்துப் பாடுவதாக அமையும் காட்சிகள், நீண்ட நிலவெளி களில் நிகழும். அவற்றின் பாடுபொருளும் திரைப்படத்தின் சாராம்சமான வாதங்களை வேறு வகையில் மொழிய முனையும். பல பாடல் காட்சிகள், திரைப்படக்காட்சி களில் நேரடியாகப் பேசிவிட முடியாத பகுத்தறிவு மற்றும் திராவிட நாடு சிந்தனைகளைப் பேசும்.

‘பராசக்தி’ திரைப்படம் அதன் தொடக்கக் காட்சியாகக் கொண்டிருப்பது பாவேந்தரின், ‘வாழ்க வாழ்க வாழ்கவே! வாழ்க வாழ்க வாழ்கவே எங்கள் வளமார் திராவிடம் வாழ்கவே’ எனும் பாடல். எனவேதான் ‘பராசக்தி’ திரைப்படத்தை ஒரு தி.மு.க திரைப்படம் எனத் தெளிவாகச் சொல்ல முடிகிறது. அநேக திராவிடச் சினிமாக்களில் தொடக்க அல்லது நிறைவுக் காட்சிகள் பாடலோடு முடியும்.

**திராவிட சினிமா தமிழ்த் திரையுலகை ஆளுகை செய்யத் தொடங்கிய போது பகுத்தறிவு, சுயமரியாதை, சமத்துவக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுப் பாடல்களை எழுதத் தொடங்கினார்.**

திராவிட சினிமாவின் இன்றியமையாத அங்கம் திரையிசைப் பாடல்கள் என்பது அனை வரும் அறிந்த செய்தி. திராவிடத்தின் தலைமைக் கவிஞர் பாவேந்தர் அவர்களின் பங்களிப்பை அறியாதவர்கள் வெகுசிலரே இருப்பார்கள். அவர் தவிர்த்த சிறந்த பாடலாசிரியர் வரிசையில், கண்ணதாசன் அவர்களுக்கு முன்னணி இடமுண்டு.

## திராவிடச் சிந்தனைப் பாடலாசிரியர்கள்

ஆனால், திராவிடப் பாடலாசிரியர்களைப் பட்டியலிடும் முயற்சி ஒரு போதும் முழுமை பெறாது. ஏனெனில், பல கவிஞர்களை உருவாக்கிய திராவிடக் கருத்தியலைப் பாடாதவர் ஒருவர்கூட இருக்க மாட்டார்கள். கவிஞர் சுரதா தொடங்கி பலரும் இந்தப் பாடல் எழுதும் பணியை மேற்கொண்டுள்ளனர். நாடக மேடைப் பயிற்சி கொண்ட படைப்பாளிகள் பலரும் கதை, திரைக்கதை, வசனத்தோடு பாடல்களும் எழுதியுள்ளனர். திராவிட சினிமாவின் தலைமகன் கலைஞர் அவர்களே. திரைப்படங்களுக்கு ஏராளமான பாடல்களை எழுதியுள்ளார் என்பது போதும் இதனை உறுதி செய்ய.

இங்கு கருதத்தக்க முக்கியமான அம்சம் என்னவெனில், அன்றைய காலத்தில் திரையுலகில் இயங்கிய பலரையும் திராவிடம் ஈர்த்தது மட்டுமின்றி, அதன் கருத்துகளைத் தங்கள் பாடல்களில் இயல்பாகவே கையாளும் நிலைக்குக் கொண்டு சென்றது. இவர்களில் பலர் முழுமையாகத் திராவிடச் சிந்தனைகளில் ஈடுபாடு கொண்டு தங்கள் பாடல்களில் அதனை எழுதினர்.

இந்தக் கட்டுரை அது போன்ற, நேரடியாகத் திராவிட இயக்கச் செயல்பாடுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளாத, ஆனால், தங்கள் பாடல்களின் திராவிடச் சிந்தனைகளை விதைத்த வர்களின், பாடல் பங்களிப்பைப் பேச விழைகிறது. இந்தப் பட்டியலும் முழுமையானது இல்லைதான். இந்த வகைப் பாடலாசிரியர்களில் மிகவும் பிரபலமானவர்கள் சிலரை மட்டுமே எழுத முனைகிறது. இதன் பொருள், பிறரை நிராகரிப்பதாகப் பொருள் இல்லை. கடுமையான ஆய்வுப் பணி மேற்கொண்டால், மட்டுமே அதைச் செய்ய முடியும் என்பதால், இந்த அளவில் அதனைச் சுருக்கிக் கொள்கிறேன்.

## உடுமலை நாராயணக் கவி

திராவிட சினிமாப் பாடலாசிரியர்களின் பட்டியலில் இவரது இடம் முதல் வரிசையிலானது. 1935 ஆம் ஆண்டில் தொடங்கி, நாடகங்களிலும் திரைப்படங்களிலும் செயல்பட்டவர் உடுமலை நாராயணக் கவி. இவரது புகழ் பேசுவோர், இவரைத் ‘**திரையிசைப் பாடல்களின் சங்கரதாஸ் சுவாமிகள்**’ எனக் குறிப்பிடுவதுண்டு. தொடக்கத்தில் பெரும்பாலும் பக்திப் பாடல்கள் மட்டுமே எழுதி வந்தவர், திராவிட சினிமா தமிழ்த் திரையுலகை ஆளுகை செய்யத் தொடங்கிய போது பகுத்தறிவு, சுயமரியாதை, சமத்துவக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுப் பாடல்களை எழுதத் தொடங்கினார்.

இவர் பாடல்கள் எழுதிய திரைப்படங்களின் பட்டியலே இவரது கருத்து நிலைப்பாட்டுச் சார்புக்குச் சான்றாகும். **‘வேலைக்காரி’, ‘ஓர் இரவு’, ‘ராஜகுமாரி’, ‘நல்லதம்பி’, ‘சொர்க்கவாசல்’ ‘பராசக்தி’, ‘மனோகரா’, ‘ரத்தக்கண்ணீர்’** இன்னும் பல. உடுமலை நாராயணக் கவி அவர்களின் திராவிடத் தொடர்பு கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்கள் மூலம் என்பதே அவரது நிலைப்பாட்டுக்குச் சாட்சி.





படங்கள் - உதவி : ஞானம்

அண்ணா எழுதிய ‘வேலைக்காரி’ திரைப்படத்தில் இவரது பாடலான, ‘வாழிய நீடுழி பகுத்தறிவாளர் ஆனந்தன்’ எனப் பகுத்தறிவாளரைப் போற்றும். ‘ஓர் இரவு’ படத்தில் திரைப்படத்தின் முத்தாய்ப்பான இறுதிக் காட்சியின் ‘கொட்டு முரசே கொட்டு முரசே மக்கள் அத்தனை பேரும் நிகராம் எனக் கொட்டு முரசே’ பாடலும் இவருடையது எனச் செய்தி. அண்ணாவும் கலைவாணரும் இணைந்த **‘நல்லதம்பி’** படத்தின் **‘கிந்தனார் சரித்திரம்’** உடுமலை நாராயணக் கவி அவர்களின் கைவண்ணம் என்பது போதும் இவர் புகழ் பேச.

## தஞ்சை ராமையாதாஸ்

தஞ்சை ராமையாதாஸ் அவர்களும் நாடகம், சினிமா எனும் தளங்களில் வெகுகாலம் பணியாற்றியவர். இவர் தேசியவாத சார்பாளராக அறியப்பட்ட போதும் நேரடியாக அதனைப் பேசினாரில்லை. அதேவேளையில் பகுத்தறிவுவாதச் சிந்தனைகளைத் தனது பாடல்களில் புனைந்தவர். இவரது தனித்துவம், பாடல்களை ஜனரஞ்சகமாக எழுதுவார் என்பதே. ‘புது யுகம்’ (1954) படத்துக்கு இவர் எழுதிய வரிகள் இப்படி இருக்கின்றன: ‘புஷ்கோட்டு ஹாட்டிலே அல்டாப்பு வேட்டிலே/ மயங்கவே மாட்டாரப்பா நம்ம தமிழ் நாட்டிலே/ ஃப்ராடெல்லாம் சொல்லாதீங்க தம்பி/ அம்மனுக் கபிஷேகம் என்று பணம் அடியார்களும்/ அசந்தவன் தலையிலே மிளகாயை அரைத்து ஆளானவருமில்லையா/ சகஜமாகப் பேசியே போர்ஜரிகள் செய்திடும் டகால்ஜிகள் இல்லையா/ தாடி சந்நியாசிபோல் பகல்வேஷம் போட்டு ஜாலியாய் வாழவில்லையா’.

எழுத்து முறை பற்றிய விமர்சனங்கள் வந்தபோது, **“வெண்பா, கலிப்பா, எண் சீர் விருத்தம்** அனைத்தும் எனக்கும் தெரியும். ஏத்தம் இறைக்கிறவன் ‘ஐலேசா’ பாடாம, ‘வண்டார் குழல் செண்டாட’ என்றா பாடுவான். நாலணா துட்டுக் கொடுத்துப் படம் பார்க்கிறவனைச் சந்தோஷப்படுத்த வேண்டும்” என்றார் ராமையாதாஸ். ஏராளமான பாடல்களையும், இருபத்தைந்து படங்களுக்குக் கதை வசனமும் எழுதியவருக்குக் கலைஞர் தஞ்சையில் மணிமண்டபம் அமைத்துள்ளார்.

## கவிஞர் மாயவநாதன்

தமிழ்த் திரையுலகில் வெகுகாலம் பணியாற்றிய மாயவநாதனை நாம் கலைஞர் அவர்களின் **‘பூம்புகார்’** படப் பாடலாசிரியராக நினைவு கொள்வதே பொருத்தம். அந்தப் படத்தின் நான்கு பாடல்கள் மாயவநாதனுடையது. **‘காவிரிப் பெண்ணே வாழ்க‘, ‘தமிழ் எங்கள் உயிரானது’, ‘தப்பித்து வந்தானம்மா‘ மற்றும் ‘அன்று கொல்லும் அரசின் ஆணை வென்று விட்டது. நின்று கொல்லும் தெய்வம் எங்கோ சென்று விட்டது’ ஆகியவை அவை.**

அந்தப் படத்தில் பாடிய கே.பி.சுந்தராம்பாள், ‘நின்று கொல்லும் தெய்வம் எங்கோ சென்று விட்டது‘ என்ற வரிகளைப் பாட மறுத்தார். ஏற்கெனவே ஊருக்குச் சென்று விட்ட மாயவநாதனைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. கலைஞர் மதிநுட்பமாக அந்த வரிகளை, **‘நின்று கொல்லும் தெய்வம் இங்கே வந்து விட்டது‘** என மாற்றிப் பாட வைத்து விட்டார். இந்த வரிகள் திரையில் ஒலிக்கும் கண்ணகியின் ‘குளோஸ் அப்’ வைத்து அவரை மனித தெய்வமாக்கினார்.

...படம் விரியும்

## வரலாறு உங்களை மன்னிக்காது!

திராவிட இயக்கத்துக்கு உள்ள மிகப்பெரிய சவால் வேறெதுவுமில்லை. வரலாறு தெரியாதவர்களுடன் அரசியல் செய்வதுதான். ‘ஆரியம், திராவிடம் பற்றி எல்லாம் அறிஞர்கள் ஆய்வு செய்து சொல்ல வேண்டும்’ என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி. இன்னொரு பக்கம், ‘மருது சகோதரர்களை தமிழ்நாடு மறந்துவிட்டது’ என்கிறார் ஆளுநர். இருபதாயிரம் புத்தகங்கள் படித்த மேதையோ, தனக்குத் தெரிந்த ஒரே வீரலட்சுமி ‘கோவில்பட்டி வீரலட்சுமி’தான் என்கிறார். இன்னொரு பக்கம், தந்தை பெரியாரை அவமதிப்பதையே கட்சியாக வரித்துக்கொண்டிருக்கிறார் ஒருவர்.

இவர்களுக்கு இடையில்தான், திராவிட இயக்கச் சிந்தனைகளை எழுதியும் பேசியும் படிக்கச் செய்தும் நாம் களமாடி வருகிறோம். ‘நெகட்டிவிட்டி செல்ஸ்’, அதாவது ‘எதிர்மறையான விஷயங்களே அதிகமாக விலை போகும்’ என்ற சூத்திரத்தில் இன்றைய ஊடகங்கள் இயங்கிக் கொண்டிருக்கும் வேளையில், திராவிட இயக்கத்தின் கொள்கைகளை, சாதனைகளை, வரலாற்றை நேர்மறையாக எடுத்துச் செல்வதில் நமக்குத் தேவையும் பங்களிப்பும் அவசரமும் இருக்கிறது. வரலாறு படிக்காதவர்களை வரலாறு மன்னிக்காது. வரலாற்றை மறந்தவர்களை, மறுத்தவர்களைக் காலம் நினைவில் கொள்ளாது.

## :ப்ளாஷ்பேக்





பெரியண்ணன் அரசு

### மாவட்டக் கழகத் தேர்தல்!

என் தந்தை அ.பெரியண்ணன், 1974–ஆம் ஆண்டு முதல் புதுக்கோட்டை மாவட்டச் செய லாளராகப் பணியாற்றியவர், நெருக்கடி நிலையில் மிசா கைதியாக ஓராண்டு சிறையிலிருந்தார். அதனால், தலைவர் கலைஞரிடம் நன்மதிப்பையும் பெற்றிருந்தார். 1990–ஆம் ஆண்டு, புதுக்கோட்டை மாவட்டக் கழகத் தேர்தல் நடத்து வதற்காக தேர்தல் பொறுப்பாளராக அன்றைய இளைஞர் அணி செயலாளரும் இன்றைய தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி அவர்களை கலைஞர் நியமித்து, புதுக்கோட்டைக்கு தேர்தல் நடத்திட அனுப்பி வைத்தார். அப்போது நடைபெற்ற நிகழ்வில் இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டது.

**-பெரியண்ணன் அரசு,**
**சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்,**
**புதுக்கோட்டை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### உணர்ச்சிப் பெருக்கு!

**1976-ஆம் ஆண்டு, மிசா நெருக்கடி களின்போது மண்டபங்களில் கூட்டம் கூடுவதற்கு இருந்த தடை ஆகஸ்டு மாதம் தளர்த்தப்பட்டது. இதையடுத்து, ஆகஸ்டு 3-ஆம் தேதி என்.வி.என் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பின் பொது மேடையில் அங்குதான் கலைஞர் பேசினார். சென்னை தொண்டர்கள் உணர்ச்சிப் பெருக்கோடு அந்தக் கூட்டத்துக்குத் திரண்டிருந்தனர். கலைஞர் ‘அன்பார்ந்த’ எனத் தொடங்கியதும் எழுந்த கரவொலி, அடங்க ஐந்து நிமிடங்களுக்கு மேல் ஆனது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 282




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131